மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 12 வெள்ளிக்கிழமை (28.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 275

# 'சனல்' 4 வீடியோ காட்சியால் அரசுக்குப் புதிய தலையிடி!

## யுத்தக் குற்ற விசாரணைக்கு மீண்டும் அழுத்தம்

கொழும்பு, ஒக்ரோபர் 28

இலங்கை இராணுவத்தினர் இளைஞர்கள் சிலரை சுட்டுக் கொல்கின்றமையைக் காட்டும் வீடியோ காட்சியை, பிரிட்டனின் 'சனல் 4' என்ற தொலைக்காட்சி வெளியிட்டிருக் கின்றமையை அடுத்து, இலங்கை அரசு மீது யுத்தக் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் வலுவடைந்திருக்கின்றது.

சர்வதேச ரீதியாகப் பல மனித உரிமை அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் உலக நாடுகளும் இலங்கை அரசு மீது கண்டனக் கணைகளை வீசத் தொடங்கியிருக்கின்றமையால் இலங்கைக்குப் புதிய தலையிடி ஏற்பட்டிருக்கின்றது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் இளைஞன் கடத்தல்

கொழும்பு, ஒக. 28

புத்தளத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

புத்தளம், மாம்புரியில் உள்ள குடியிருப்பு ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரை ஓட்டோவில் வந்த அடையாளம் தெரியாத சிலர் கடத்திச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் கடத்தப்பட்டவரின் மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

கடத்தப்பட்டவர் சிக்சன் கிசோர்குமார் என்ற 31 வயதுடையவர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. கடத்த வந்த அடையாளம் தெரியாதவர்கள் குடியிருப்புக்கு முன் இருந்து கிசோர்குமாரை அழைத்து, பல வந்தமாக முச்சக்கர வண்டியில் ஏற்றி கடத் திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை அரசுக்கு எதிரான சதியில் இதுவும் ஒன்று; எமது இராணுவத்தினர் எவரையும் கொலை செய்யவில்லை

### ஊடகத்துறை அமைச்சர் அனுரா மறுப்பு

கொழும்பு, ஒக. 28

'சனல் - 4' தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட - இளைஞர்கள் சிலரை இராணுவத்தினர் சுட்டுக் கொன்ற வீடியோ காட்சியானது அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதி நடவடிக்கைகளில் ஒன்று என்று ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சு பிரிட்டனுடன் இணைந்து இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அவர் சொன்னார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)



மறவன்புலோவில் நடைபெற்ற ஏர்பூட்டு விழாவில் பஸில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, பிரிட்டிஷ் தூதர் ஆகியோர் உழுது விவசாயத்தை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

*(மேலும் படங்கள் 15 ஆம் பக்கத்தில்)*

## பிரபாகரன் குறித்த விசாரணைக்காக டில்லியிலிருந்து அதிகாரிகள் வருவர்

கொழும்பு, ஒக. 28

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ராஜீவ் காந்தி படுகொலை குறித்து விசாரிக்கும் பல்துறை கண்காணிப்பு முகவர் அமைப்பு விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளது என புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அமைப்பின் செயற்பாடுகளை இந்திய அரசு மேலும் ஒருவருட காலத்திற்கு தடைசெய்துள்ளது.

இந்த அமைப்பின் காலம், கடந்த மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில் மூன்று மாதத்திற்குப் பின்னர் மீண்டும் அதற்கு ஒரு வருட நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையிலேயே பல்துறை கண்காணிப்பு விசாரணை அமைப்பின் அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் தலைவர் குறித்து ஆராய்வதற்காகவும் மேலதிக தகவல்களை பெறுவதற்காகவும் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## வன்னி மக்களின் வாக்குகளை அபகரிக்கும் கபட நோக்கம் எதுவும் அரசிடம் இல்லை

### மீள்குடியேற்றப் பணிகள் தீவிரம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஒக. 28

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் வன்னி அகதிகளின் வாக்குகளை அபகரிப்பதற்காகவே, அம் மக்களின் மீள்குடியேற்றத்தை அரசு தாமதப்படுத்துகின்றது என்று மனோகணேசன் எம்.பி. நேற்றுமுன்தினம் கூறியதை அரசு மறுத்துள்ளது.

அப்படியானதொரு திட்டம் தொடர்பாக அரசு நினைத்துக் கூடப் பார்த்ததில்லை என்று அரசு மேலும் தெரிவித்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்தோரையும் மீளக்குடியமர்த்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 28

அதிஉயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தலினால் தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களையும் மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார சபை ஊழியரின் விடுமுறைகள் ரத்து

கொழும்பு, ஒக. 28

இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகள் மறு அறிவித்தல் வரை நேற்று முதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அத்தியாவசிய பொதுச்சேவையாக கருதி தொடர்ந்தும் செயற்திறன் மிக்க சேவையை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என

(16 ஆம் பக்கம் பார்க்க)

செலிங்கோ லைஃப் அனுசரணையில்.....
வடமராட்சியின் 3 ஆவது படையணியான சிங்க றெஜிமன்ட் நடத்தும்


மாபெரும் கிரிக்கெற் விருந்து

யாழில் முதன்முறையாக மின்னொளியில் நெல்லியடி குஞ்சர் கடை மைதானத்தில் இன்று இரவு காணத்தவறாதீர்கள்.....
இறுதியாட்ட அணிகள்: பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் VS நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டுக்கழகம்
தொடர்ந்து இன்னிசைநிகழ்ச்சி இடம்பெறும்
Big or Small - Ceylinco Protects them all

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் நேற்று மக்கள் மீள்குடியேற்றப்படுவதற்காக பஸ்கள் மூலம் அழைத்துச்செல்லப்படுவதையும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன், வேலணை பிரதேச செயலர் எம். நந்தகோபாலன் ஆகியோர் அகதிகளை அனுப்பும் பணிகளை மேற்கொள்வதையும், சிறுமி ஒருவரை சிரித்த முகத்துடன் தந்தை ஒருவர் அழைத்துச் செல்ல தயாராகுவதையும் மேல்வரிசையிலும் - மண்கும்பான் பிள்ளையார் கோயில், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் ஆகியவற்றில் அகதிகள் பதிவுகளை மேற்கொள்வதை கீழ் வரிசையிலும் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

# அல்லைப்பிட்டி, மண்கும்பான் பிரதேசங்களில் 221 குடும்பங்கள் நேற்று மீள்குடியமர்வு

நல்லூர், ஒக. 28

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் இருந்து 2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வசித்து வந்த 221 குடும்பங்களைச் சேர்ந்த 754 பேர் நேற்று வியாழக்கிழமை மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இந்த மக்கள் அனைவரையும் நேற்றுக்காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் ஒன்று கூடுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி மக்கள் அனைவரும் அங்கு ஒன்று கூடினார்கள். இவர்களுடன் அந்த பகுதிகளைச் சேர்ந்த கிராம அலுவலர்களும், வேலணைப் பிரதேச செயலர் மு. நந்தகோபாலனும் அங்கு வந்திருந்தனர்.

பொது மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட இந்த மக்களை உத்தியோகபூர்வமாக அனுப்பி வைப்பதற்கு உரிய அதிகாரிகள் வருவார்கள் என மக்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் இந்த மக்கள் காலை முதல் யாழ்.மத்தி கல்லூரியில் காவல் இருந்தனர் நீண்ட நேரமாகியும் அங்கு உரிய அதிகாரிகள் எவரும் வரவில்லை.

இதன் பின்னர் பிற்பகல் 3.30 மணிக்கு அவ்விடத்துக்கு வந்த யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அந்த மக்களை பஸ்களில் ஏற்றி அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைத்தார்.

மக்கள் நேற்று மாலை 4 மணிக்கு தமது சொந்த இடங்களுக்குச் சென்றனர்.

வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் இந்த மக்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றார். இவர்களுக்கான பதிவுகளை அல்லைப்பிட்டி படையினர் மேற்கொண்டனர்.

அல்லைப்பிட்டி சந்தியில் இருந்து வேலைணை கடற்படை அதிகாரி கப்டன் சமரசிங்க அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்திற்கு சமுகமளித்து பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை, எடுத்தார். மண்கும்பான் பிள்ளையார் கோவிலின் விநாயகர் கல்யாண மண்டபத்தில் மண்கும்பானைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்குகான வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்களுக்கான இரவு உணவு வழங்குவதற்கு பிரதேச செயலர் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார். மண்கும்பான் பகுதியில் அனேகமாக எல்லா வீடுகளுமே சேதமடைந்து காணப்பட்டன.

(50-111-224-86)


## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஆனந்தி நந்தகுமார்
அவர்களின் பாசமிகு தந்தை
சின்னத்தம்பி கந்தசாமி அவர்களின்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
மறைவுச் செய்தி கேட்டு நாமும் துயர் கொள்வதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவரின் ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை, நீர்வேலி.
(88254)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 ★ 02 ★ 1947



மறைவு 29 ★ 08 ★ 1990

### திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு

திதி : (28.08.2009) நவமி

மாதா பிதா தெய்வம்
பெற்றோர்க்கு சேவை செய்தலே முடிவான நிறைவாகும்
ஏனெனில் உடலில் ஓடும்குருதி, உணவு, பணம், அறிவு
இவை எமக்கு அவர்கள் ஈர்ந்த கொடை
இதற்காக அவர்களிடம் நன்றியுணர்வைக் காட்டுவோம்.

*103/4, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
குடும்பத்தினர்.


## புறக்கோட்டையில் தேடுதல்; 4 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு, ஒக. 28

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற தேடுதலில் நான்கு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு விசேட அதிரடிப்படையினர் நடத்திய தேடுதலில் கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் மலையக இளைஞர்கள் என்றும் வர்த்தக நிலையங்களில் பணிபுரிபவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான ஐந்து இளைஞர்களும் புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சில தகவல்கள் தெரிவித்தன.

எனினும், சோதனை நடவடிக்கைகளின்போது இளைஞர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று புறக்கோட்டை பொலிஸார் நேற்றுக் காலை தெரிவித்தனர். (சி)


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய நிர்வாக சபையைச் சேர்ந்த
திரு.ம.கருணாகரன் அவர்களின் புதல்வன்
கருணாகரன் மாதுளன்
(யாழ்.பரியோவான் கல்லூரி)
அவர்களின் மரணச் செய்தியை கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை
பாண்டியன் தாழ்வு ஸ்ரீநரசிம்ம ஞான வைரவர் தேவஸ்தானம்



## மரண அறிவித்தல்கள்

### செல்வன் கருணாகரன் மாதுளன்
(யா/பரியோவான் கல்லூரி, தரம் 10 மாணவன்)



பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கருணாகரன் மாதுளன் (26.08.2009) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் கருணாகரன் - ஜெயந்தி தம்பதியினரின் பாசமிகு மகனும் கீர்த்திகா (யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), பதுசனன் (யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் தேசோவதி மகாலிங்கம் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் கிருஷ்ணபிள்ளை மரகதவல்லி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஹரிகரன், காலஞ்சென்ற ஜோகேஸ்வரி மற்றும் பிரபாகரன் - புஸ்பராணி, கிருபாகரன் - தேவநந்தினி (லண்டன்), சிறீகரன் - ஹர்சீ (லண்டன்), கேதீஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் மருமகனும், பங்கயவ தனி - ஜெயக்குமார் (ஜேர்மனி), ரவிக்குமாரி - தர்மகுலநாயகம் (ஹொலன்ட்), பரமலிங்கம் - வசந்தகுமாரி (சுவிஸ்), மதிவதனி - தாமரைச்செல்வன் (பிரான்ஸ்), குமார் (கண்டி) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/12, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை,
பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்.

### நாகலிங்கம் வைத்திலிங்கம் (செல்லக்கண்டு)

வட்டு.தெற்கு வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் வைத்திலிங்கம் (செல்லக்கண்டு) 27.08.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சுமித்ரா, சுதாகரன், நாகலோஜினி, திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேஸ்வரனின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.*
தகவல் வை.சுதாகரன் (சுதன்) மகன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்த லட்சணத்தில், ஒழியுமா வறுமை..?

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிந்திய அறிக்கை இப்போது வெளியாகி இருக்கிறது. அதன் முதலாவது பகுதியில் ஆசிய நாடுகள் குறித்த பொருளாதார நிலைமை மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள - உண்டா கியுள்ள - பாதிப்புக்கள் என்பன பொதுவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவது பகுதியில் அந்தந்த நாடுகளின் பல்வேறு துறைகளிலும் காணப்படும் குறைபாடுகள் அல்லது வீழ்ச்சி என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இரண்டு பகுதி அறிக்கைகளிலும் இலங்கையின் நிலைமை குறித்து பாதகமான தகவல்கள், தரவுகளே நிறைந்து காணப்படுகின்றன. இந்த நாட்டில், இலங்கையில், எங்கள் நாட்டில் இருபது (20) முதல் முப்பது (30) சதவீதமானவர்கள் பட்டினியால் வாடுகின்றார் கள் என்ற மிகப்பரிதாபகரமான, இல்லை இல்லை பெரும் கொடுமையான நிலைமை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

வறுமையும் பசிக்கொடுமையும் உச்சநிலையில் தலைவிரித்தாடும் நாடுகளின் வரிசையில் இலங்கை முன்பந்தியில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான், ஆர்மேனியா, பங்களாதேஷ், கிழக்குத் திமோர் ஆகிய நாடுகளிலும் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி புள்ளிவிபரங்களுடன் எடுத்துகாட்டியுள்ளது.

தகுந்த தரவுகள் ஆதாரங்களின் அடிப்படையிலேயே வங்கியின் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. அதனால் உள்நாட்டுப் பத்திரிகைகள் ஊடகங்கள் வெளியிடும் செய்திகளுக்கு மறுப்புத் தெரிவிப்பதுபோன்று, ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கைக்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவிப்பது துர்லபம். அதனையும் திட்டவட்டமாக, வரையறுத்துக் கூறுவதும் சில சந்தர்ப்பங்களில் தப்பிதமாகிவிடும். ஏனெனில் எந்த விடயத்திலும் - விவகாரத்திலும் - தமது பக்கம் மெத்தவும் நிறைவானது, ஏன் கச்சிதமானது என்றுகூட மறுத்துரைப்பதில் பலே கெட்டிக்காரர்கள் இலங்கையின் இன்றைய அரசும் அதன் அரசியல்வாதிகளும், உயர் அதிகாரிகளும்!

போர் என்ற ஓர் போடுதடியைக் காட்டி தமது தவறுகள், நிர்வாகத் திறமையின்மை, மக்கள் மீது அக்கறையின்மை, ஊழல், அதிகாரத்தனம் அரசியல் பழிவாங் கல் என்பவற்றைக் குழியில் போட்டு மூடி மறைப் பதில் சூராதி சூரர்கள் இவர்கள்! இல்லையெனில் முல்லைத்தீவின் புதுமாத்தளன் பகுதியில் இறந்தவர்களின் எண்ணிக்கை நான்கு தானங்களுக்குள் தான் என்று சர்வதேசத்துக்குக் கதைவிட முடியுமா என்ன?

இலங்கை உட்பட ஆசியாவில்நிலவும் வறுமை, பசிக்கொடுமை ஆகியவை இன்னும் ஆறு வருடங்களில்-2015 இற்கு முன்னர் - கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும் என்ற வங்கியின் சிபார்சு, வெறும் கறுப்பு வெள்ளையில் மட்டுமே பதிவாகியிருக்கும். நடைமுறையில், மக்கள் மத் தியில் பட்டினிச் சாவுகளின் வீதம் அதிகரிக்கும் என்பதனை எவரும் ஆரூடம் கூறவேண்டிய தேவையிருக்காது!

அது ஒருபுறம் இருக்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இரண்டாவது பகுதி இந்நாட்டு மக்களைப் பொறுத்தளவில் வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று, மிகக் கடும் வெப்ப சோதனையாக அமைந் துள்ளது.

இலங்கையில் கோரத் தாண்டவம் ஆடும் அரசியல் தலையீடுகளும், ஒரே கருமத்தை அல்லது திட்டத்தை பல அரச திணைக்களங்கள் அல்லது முகவர்கள் திரும்பத் திரும்பச் செயற்படுத்துவதும், இந்த நாட்டில் வறுமையை ஒழிக்கும் முயற்சியினை பின்னுக்கு உந்தித்தள்ளி வீழ்த்துகின்றது என்று மிகுந்த கவலையுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது!

இதன் விளைவாக ஏழைகளின் மேம்பாட்டுக்குப் பதிலாக அவர்களின் வாழ்க்கை நிலைமையை மேலும் நலிவடையச் செய்துவிடுவதாகவும், அதன்காரணமாக, வறுமை இந்த நாட்டில் எக்காலத்திலும், எந்த யுகத்திலும் ஒழிக்கமுடியாது நிரந்தர இடம்பிடித்துக்கொள்ளும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்திருக்கின்றது!

அரசாங்க நிர்வாகத்துறை அளவு கணக்கின்றி ஊதிப் புடைத்து நிற்கின்றது; குழப்பமடைந்தும் உள்ளது. பொறுப்புக் கூறும் தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. இவற்றின் காரணமாக இந்த நாட்டில் மக்கள் நலன்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி விட்டன.

ஏழ்மையை இல்லாமல் செய்யவும் அபிவிருத்திக் கொள்கைகளையும் திட்டங்களையும் உரியமுறையில் நடைமுறைப்படுத்தவும் நிர்வாகக் கட்டமைப்பும் அதன் குறைபாடுகளும் தடைகளாக உள்ளன.

பல சந்தர்ப்பங்களில் சில திட்டங்கள் வறுமையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி தனது அறிக்கையில் வெளிப்படுத்தி உள்ளது.

அரச நிர்வாகக் கட்டமைப்பு ஊதிப் பெருத்துள்ளதால் (1.1 மில்லியன் ஆளணியினர்) பல குளறுபடிகள், குறைபாடுகள் மலிந்து தேவையான திறன் பெருக்கம் நலிந்து போயுள்ளது.

இவ்வாறு பற்பல குறைபாடுகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றை விடவும் முக்கியமான தார்ப்பரியம் ஒன்று உண்டு என்பதனை அது வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்கள், வறுமை ஒழிப்பு போன்ற முதுகெலும்பான பல செயற்பாடுகளிலும் அரசியற் செல்வாக்கு என்ற பேய் ஊழிக்கூத்து ஆடுவதாக வங்கியின் அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. அரசாங்கத்துக்குச் சார்புடையயோருக்குத் தகுதி, வகுதி பார்க்காமல் உதவுவதும், அதற்கு எதிரானவர்கள், ஆதரவளிக்காதவர்கள் பழிவாங்கப் படுவதும் இலங்கையின் வறுமை ஒழிப்புக்கும் அபிவிருத்திக்கும் பெரும் தடை என்பது அறிக்கையில் புட்டுக்காட்டப்படுகிறது.

இதனை நிரூபிக்க வங்கி அறிக்கை விவரித்துள்ள இரண்டு சிறு துளி உதாரணங்கள்: சமுர்த்திப் பயனாளிகள் தெரிவும், அரசியல் காரணங்களுக்காக ஆசிரியர்கள் பழிவாங்கப்படுவதும் மாணவர் கல்வி பாதிப்படைவதுமாகும்.

இந்த லட்சணத்தில் வறுமை ஒழிப்பு, அபிவிருத்தி என்ற வகையறாக்கள் வெறும் வெற்றுவேட்டுக்களும் போலிக் கோஷங்களுமே என்பதில் என்ன சந்தேகம்....?

# தீவுப் பகுதிக்கான மின் விநியோகத்தைச் சீராக்க புதிய மின் பிறப்பாக்கியை வழங்கி உதவுங்கள்.

## யாழ்.வந்த பிரிட்டிஷ் தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.28

தீவுப் பகுதிக்கான மின்சார விநியோகத்தைச் சீர்செய்வதற்கு வசதியாக புதிய மின் பிறப்பாக்கியை வழங்கி உதவுமாறு நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரிட்டிஷ் தூது வர் பீற்றர் ஹெய்ஸிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இலங்கை மின்சாரசபையின் வடபிராந்தியப் பிரதிப்பொதுமுகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தம் 'வடக்கின் வசந்தம்' மீளாய்வுக் கூட்டத்தில் வைத்து இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இந்த மீளாய்வுக் கூட்டம் வடக்கு மீள்குடியமர்வுக்கும் அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தலைமையில் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது. பிரிட்டிஷ் தூதுவர் பீற்றர் ஹெய்ஸ், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர்.மார்க் மற்றும் பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

'வடக்கின் வசந்தம்' 180 நாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ். குடாநாட்டுக்கான மின்சார விநியோகம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதன்போதே மின்சார சபையின் வடபிராந்தியப் பிரதிப்பொது முகாமையாளர் பிரிட்டிஷ் தூதுவரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தீவுப் பகுதிக்கான மின் விநியோகத்துக்கென பிரிட்டிஷ் அரசாங்கம் 1998 ஆம் ஆண்டு மின்பிறப்பாக்கி ஒன்றை வழங்கியிருந்தது. அது தற்போது பழுதடைந்துள்ளது. எனவே தீவுப் பகுதிக்கான மின் விநியோகத்தைச் சீர்செய்வதற்கு 500 கிலோவாற்ஸ் திறன் கொண்ட மின் பிறப்பாக்கியை வழங்கி உதவவேண்டும்- என்றார்.

இதற்குப் பதிலளித்த பிரிட்டிஷ் தூதுவர் இதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறும் அது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் எனவும் தெரிவித்தார். (50-111-86)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக 28

யாழ். கல்வி வலயப்பாடசாலை அதிபர்களுக்குகான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தர உள்ளீடு, வரவு-செலவு கணக்கு ஆகிய விவரங்களுடன் சமுகமளிக்குமாறு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

# தமிழ் இலக்கிய விழாவிற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.28

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தமிழ் இலக்கிய விழாவிற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு பிரதேச சபை செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் அல்லது கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள், கலாசார நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், படசாலை அதிபர்கள், கலைஞர்கள், பத்திரிகை நிருபர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாத முற்பகுதியில் தமிழ் இலக்கிய விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (203-204)

# உலக வங்கியின் மூலவள நிலையத்தை பொது நூலகத்தில் அமைப்பதற்கு முயற்சி

## ஆராய்வதற்கு உயரதிகாரிகள் குழு யாழ்.வருகிறது

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.பொது நூலகத்தில் உலக வங்கியின் மூலவள நிலையம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்து ஆராயப்படவிருக்கின்றது.

இது குறித்து ஆராய்வதற்கென உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் அடங்கிய உயரதிகாரிகள் குழுவொன்று இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றது.

நாளை மறுதினம் யாழ்.வரும் இக்குழுவினர் யாழ்.பொது நூலகத்தில் உலக வங்கியின் மூலவள நிலையம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்து நூலக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை யாழ்.பல்கலைக்கழகத்தில் இலங்கையின் கல்வி நிலை ஆய்வு தொடர்பான நூல் ஒன்றையும் உலக வங்கிக் குழுவினர் வெளியிடவுள்ளனர். (50-120)

# கவிஞர் இ. முருகையனின் நினைவு தின விழா நாளை புற்றளை ம.வியில் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஓக.28

அகில இலங்கை இளங்கோ கழகத்தின் ஏற்பாட்டில் ''சாகித்தியரத்னா'', 'கலாநிதி' கவிஞர் இ. முருகையன் நினைவு தின விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புற்றளை மகா வித்தியாலய சின்னத்தம்பி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழக அமைப்பாளர் தென் புலோலியூர் பரா.ரதீஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தொடக்கவு ரையை யாழ். மாவட்ட விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் ச. உருத்திரேஸ்வரன் நிகழ்த்துவார்.

நினைவுரைகளை ''ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் முருகையன்'' எனும் தலைப்பில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் த. மார்க்கண்டு, ''முருகையனின் கவிதைகள் - ஒரு நோக்கு'' எனும் தலைப்பில் ''தாயகம்'' ஆசிரியர் க.தணிகாசலம், ''மொழிபெயர்ப்பும் முருகையனும்'' எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற ஆசிரியர் பேராசான் ஆ.கந்தையா, ''முருகையன் என்றொரு மானிடன்'' எனும் தலைப்பில் மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் கவிஞர் கொற்றையூர் பி. கிருஸ்ணானந்தன்,''எனது பார்வையில் முருகையன்'' எனும் தலைப்பில் புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் த.கதிர்காமநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

''முருகையனின் அடிதொட்டு'' என்னும் தலைப்பில் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு கவியரங்கமும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின்-தலைமைக் கவிஞராக கல்வயல் வே. குமாரசாமி தலைமை தாங்கி நிகழ்வுகளை நடத்தவுள்ளார். (203- 201)

# இலங்கை அதிபர் சேவையில் ஆயிரத்து 800 பேருக்கு பதவி உயர்வு

அச்சுவேலி,ஓக.28

இலங்கை அதிபர் சேவை 2:I இல் இருந்து அதிபர் சேவை தரம்I க்கு ஆயிரத்து 800 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக் கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள் ளன. நேரில் சென்று நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கள் ஊடாக நியமனக் கடிதங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சேவை மூப்பு, திறமை அடிப்படையில் இலங்கை அதிபர்சேவை வகுப்பு 2:I இல் இருந்து இலங்கை அதிபர் சேவை தரம் I க்கு 17 வரு டங்க ளுக்கு பின்னர் இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை 2:I இல் உள்ளவர்களில் வினைத் திறமை காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் தவிர ஏனையவர்கள் அனைவருக்கும் பதவி உயர்வு பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத் துள்ளது.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2: I க்கு 1992-06-01 ஆம் திகதி மற்றும் 1994.06.01 ஆம் திகதி ஆகிய காலப் பகுதியில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்தக் காலப்பகுதியில் நியமனம் பெற்றவர்களுக்கே தற்பொழுது சேவை மூப்புத் திறமை அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன.

பதவி உயர்வு நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தனித் தனியாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் அழைப்புக் கடிதங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு குறுகிய அவகாசத்தில்லேயே கிடைக் கப்பெற்றதாக கூறப்படுகின்றது.(50-11)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 13 | 29.08.2009 சனிக்கிழமை |
| திதி: | நவமி மு.ப. 11.06வரை |
| நட்சத்திரம்: | கேட்டை மு.ப. 11.52 வரை |
| சுபநேரம்: | 03.05 - 04.35 |
| இராகுகாலம்: | 09.05 - 10.35 |

# யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தொலைபேசி நிலையத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு 12 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 116 கைத் தொலைபேசிகள், 2 லட்சத்து 22 ஆயிரம் ரூபா பணம் என்பன திருட்டுப் போயுள்ளதாகக் கடை உரிமையாளர்களால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:

கடந்த 26ஆம் திகதி இரவு குறிப்பிட்ட கடையின் கூரைத் தகடை உடைத்து கடையினுள் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து 116 புதிய கைத்தொலைபேசிகள் மற்றும் பாவனையில் இருந்த மடிக் கணனி ஆகியவற்றையும் திருடியுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸார் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்
## சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கூறுவிலை கோரல்

நாவற்குழி அரச உணவுக்களஞ்சியத்தில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

இந்தச் சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கு விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்தை புனர்வாழ்வுக் கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் "சிற்றுண்டிச் சாலையினை நடத்துவதற்கான கூறுவிலை" என குறிப்பிட்டு 10.09.2009 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான நிபந்தனை, மற்றும் விவரங்களை அறிய விரும்புபவர்கள் மாவட்ட செயலக புனர்வாழ்வுக்கிளையில் வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை பெற்றுக்கொள்ளமுடியும்.

கூறுவிலைகள் 10.09.2009 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

க. கணேஷ்,
அரசாங்க அதிபரும் / மாவட்ட செயலரும்,
யாழ்.மாவட்டம்.

# 11 ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு 11 ★ 11 ★ 1939



இறப்பு 28 ★ 08 ★ 1998

அமரர்
## பொன்னையா தியாகராசா
(சாலைப்பரிசோதகர், இ.போ.ச, கிளிநொச்சி, பருத்தித்துறை சாலைகள்)

ஆண்டுகள் பதினொன்று சென்றாலும்
ஆறாது எம் துயரம்
நிலையற்ற இவ்வுலகில் அப்பா எமக்கு
நிறைவான செல்வம் நீங்கள்
பலகோடி செல்வங்கள் எம்மைத்
தேடிவந்தாலும்
அப்பா எம் நெஞ்சில் மகிழ்ச்சி இல்லையே
கரம் தந்து கரை சேர்க்கும் உங்கள்
அன்பு நெஞ்சம் எம்துன்பச் சுமை
தாங்குமே
என்றும் உங்கள் அன்பில் நிலைத்திருந்து
உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை
வேண்டுகின்றோம்

இல: 47,
பெந்தக்கோஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(88256)

# பசுப்பால் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக 28

இடம்பெயர்ந்து மிருசுவில், கொடிகாமம், ஜீ.ரி.எம்.ஜே ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 325 சிறுவர்களுக்கு இன்று பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம் பசுப்பால் வழங்கவுள்ளது.

இத்திட்டம் சகல நலன்புரி நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்று சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (6)

# குடாக்கடலில் கடற்றொழிலுக்கு நேற்று அனுமதியில்லை

வண்ணை, ஒக. 28

குடாக்கடல் நீரேரியில் மீன்பிடித் தொழிலுக்கு நேற்று வியாழக்கிழமை படையினர் கடற்றொழிலாளர்களை அனுமதிக்கவில்லை.

குருநகர் இறங்குதுறைக்கு தொழிலுக்குச்சென்ற கடற்றொழிலாளர்களை படையினர் அனுமதிக்காததால் மீனவர்கள் திரும்பிவர நேர்ந்தது.

இதனால் நேற்று சின்னக்கடை மீன் சந்தை மற்றும் பண்ணை மீன்கடைகளில் கடலுணவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியதாக மக்கள் தெரிவித்தனர். (1-160)

# வேலையற்ற பட்டதாரிகள் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ். மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கான பதிவு இலக்கம் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் சமுகமளிக்குமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (06)


## CAR விற்பனைக்கு

ஆங்கில இலக்கமுடைய KA - XXXX JAPAN கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 5590174
88259

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1976 ஆம் ஆண்டு, அச்சுவினி, 1ஆம் பாதம், பாவம் 31 3/4, செவ்வாய்க் குற்றமற்ற, உதவிப் பணிப்பாளர் (SLAS), B.Sc(Hones), M.Sc பட்டதாரி மணமகனுக்கு தகுந்த உள்நாட்டு 28 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு :- 222 8760
88250

சிகரம் தொடு
SIKARAM THODU

## இளைஞர் கல்வி, தொழில் வாழ்க்கை வழிகாட்டி இதழ் அறிமுகமும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கும்

காலம்: நாளை (29.08.2009) சனிக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை
இடம்: யாழ்.வீரசிங்கம் மண்டபம்

விரிந்து கிடக்கும் தொழில் வாய்ப்புக்களை இனங்கண்டு முன்னேற அரிய வாய்ப்பு.
அனுமதி இலவசம்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### விவசாய பீடம்
### விரிவுரைகள் ஆரம்பம்

31.08.2009 அன்று ஆரம்பமாகவிருந்த முதலாம் (1201), இரண்டாம் (2201), மூன்றாம் (3101), நான்காம் (4101) வருட மாணவர்களுக்கான அரையாண்டின் இரண்டாவது பகுதிக்குரிய விரிவுரைகள் (17.09.2009) அன்று ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகின்றேன்.
பதிவாளர்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பர் கணபதிப்பிள்ளை

கேசரி வீதி, தையிட்டி காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும், வதிரி றோட் (யூனியனடி), இமையாணன், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பர் கணபதிப்பிள்ளை நேற்று (27.08.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பர் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகனும், தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சத்தியானந்தமலர், குமாரகுலசிங்கம், இராஜகுலதேவி, விமலாதேவி, குணசிங்கம், இந்திராதேவி, சாந்தினிதேவி, சறோஜினிதேவி ஆகியோரின் தந்தையும். ஐயாத்துரை, புஸ்பராணி, கந்தசாமி, ஏகநாதன், யோகேஸ்வரி, சாந்தசோதி, இரத்தினேஸ்வரன், பிரபாகரன் ஆகியோரது மாமனாரும். நிர்மலன், மயூரன், நிறஞ்சன், நிரோசினி, மீரா - லலித்குமார், சுரேகா - தேவசீலன், கோமதி, பிரசன்னா, கீர்த்தன், சங்கீர்த்தன், கீர்த்திகா, தர்மிகா, அபிராமி, சகானா, இசைச்செல்வி, இசைப்பிரியா, இசைவேந்தன், லோஜிதன், நிதூசன், அக்சயா ஆகியோரது பேரனும், கிஷோர், விசோபன் ஆகியோரது பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.08.2009) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எல்லண்குளம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வதிரிவீதி, (யூனியனடி),
இமையாணன், உடுப்பிட்டி.

தகவல்: பொ.பிரபாகரன் (மருமகன்)

## திருமதி இராசகோண் அன்னபூரணம் (நாகம்மா)

தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசகோண் அன்னபூரணம் 26.08.2009 அன்று காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்ற செல்லையா இராசகோணின் மனைவியும் திருமதி க. இராஜேஸ்வரிஅம்மா, இ. குணராசா (ஓய்வூதியர், மேலதிக பொறுப்பு பகுதி, பதிவுகாரர் காரியாலயம்), இ. சோதிராஜா (இளைப்பாறிய இலிகிதர்), திருமதி. கை. ஜதுகுலராணி, இ. புண்ணியராஜா (இலங்கை வங்கி, காரைநகர்) , திருமதி. செ.சற்குணராணி (சுவிஸ்), திருமதி நா. கிருபாராணி (பிரான்ஸ்), திருமதி ர. மகாலட்சுமி (ஆசிரியை, தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் தாயும். கந்தசாமி (இலங்கை வங்கி ஓய்வூதியர்), திருமதி கு.ஜயஜோதி, திருமதி சோ. குகானந்தி, கைலாயபிள்ளை (ஓய்வூதியர், யாழ்.போதனா வைத்தியசாலை), திருமதி பு.சிவசக்தி, செல்வரத்தினம் (சுவிஸ்), நாகேஸ்வரன் (பிரான்ஸ்), ரவிச்சந்திரன் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.

## இராமலிங்கம் சொர்ணலிங்கம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்தவருமான இராமலிங்கம் சொர்ணலிங்கம் 26.08.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் -பாக்கியலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் சிவப்பிரகாசம் காலஞ்சென்ற தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் சாருமதிதேவியின் அன்புக் கணவரும் லிங்கேஸ்வரன், லிங்கதாசன் (டென்மார்க்), லிங்கவாசன், லிங்கேஸ்வரி, சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிருந்தாவின் பாசமிகு மாமனாரும் நடனசுந்தரி, காலஞ்சென்ற யோகேஸ்வரி காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சற்குணானந்ததேவி, பரிமளகாந்தன், விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பரஞ்சோதிநாதன்- சந்திரவதனா தம்பதியினரின் பாசமிகு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.08.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இல 33,சிவன் பண்ணை வீதியில் உள்ள மைத்துனியின் (சற்குணானந்ததேவி) இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

த.மு: 33,சிவன்பண்ணை வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.
நி.மு: 2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

தகவல்: சி.பரிமளகாந்தன் (M.S.O, யாழ். பிரதம தபாலகம்)




# யசோ மோட்டோர்ஸ்
## மீண்டும் விற்பனையில்

கை ரெற்றிக் சபரி 48 CC


கலர் — [illegible] கறுப்பு, சில்வர்

T.P.: 7566




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஹற்றன் நஷனல் வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் திறப்பு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

வங்கியின் முதலாவது கணக்குக்கான வைப்புப் பணத்தை பிரதிப் பொது முகாமையாளரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான இ.தியாகராஜா வர்த்தகர் ஒருவரான பொ.இராசதுரையிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கின்றனர்.

மகளிருக்கான சுயதொழில் உதவிகளும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன. பயனாளிகளில் ஒருவரான சுமதி சோதிநாதன் சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ அதிகாரி பந்துல அபய விக்கிரமவிடமிருந்து காசோலையைப் பெற்றுக்கொள்கின்றார்.

வங்கியின் முகாமையாளர் ரி.அருணன், பேராசிரியர் நடராஜசுந்தரம் ஆகியோர் உரையாற்றுகின்றனர். ஆரம்ப நிகழ்வு தொடர்பான படங்கள் நேற்று வெளியாகியிருந்தன. (படங்கள்: சுந்தா)





## யாழ்.ப.நோ.கூ.சங்கத்தை—
# சிறந்த அபிவிருத்திப் பாதையில் கொண்டுசெல்ல துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்
## அதன் புதிய தலைவர் தெய்வேந்திரன் உரை

யாழ்ப்பாணம், ஓக.28

யாழ்.ப.நோ.கூ.சங்கத்தைச் சிறந்த ஓர் அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் புதிய தலைவர் க.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

சங்கத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பணியாளர்களுடனான கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்திலேயே செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு நஷ்டத்தில் செயற்படும் சங்கங்களை இலாபகரமானவையாகச் செயற்பட வைக்கவும் அவற்றை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கும் பணியாளர்களின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமானது.

கடந்த காலங்களில் பல்வேறு தவறுகள் கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெற்றுள்ளன.

தற்போது இந்தத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

அதனைவிட சங்கத்தை ஓர் அபிவிருத்திக்குக் கொண்டு செல்வதற்கு சகலரும் சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும்.

சங்கக் கிளைகளில் பொருள்களைத் தட்டுப்பாடு இன்றி நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப விநியோகிக்க வேண்டும்.

நுகர்வோர் தேவைக்கு ஏற்ப விநியோகிக்க வேண்டும்.

சகல கிளைகளிலும் பொருள்கள் தட்டுப்பாடின்றி போதியளவு கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் - என்றார்.

கடந்த கால நிர்வாகங்களினால் பணியாளர்களுக்கு வழங்காமல் இருக்கும் கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இயக்குநர்களான ஆ. செல்லத்துரை, ரி.ராஜரட்ணம், பொது முகாமையாளர் ரி.மனோகரன் ஆகியோரும் உரையாற்றினர். (203-224)

## வட்டுக்கோட்டை வைத்தியசாலையில் அம்புலன்ஸ் தரிப்பிடம் திறந்துவைப்பு

நவாலி, ஓக.28

வட்டுக்கோட்டை பிரதேச அரசினர் வைத்தியசாலையில் 14 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட அம்புலன்ஸ் தரிப்பிடமும் சாரதி விடுதியும் கடந்த 24 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி திருமதி கிருபா செல்வராசா தலைமையில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (203-100)

## பாலம் அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.28

இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகச் செல்லும் வீதியின் குறுக்கே பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வீதியின் குறுக்கே இப்பாலம் அமைக்கப்படுவதால் போக்குவரத்துக்கு வீதிக்கு அருகே மாற்றுவழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. (203-224)

# தவணைப் பரீட்சைப் பொறுப்பு பாடசாலை அதிபர்களின் வசம்
## கல்வியமைச்சுத் தீர்மானம்

கொழும்பு, ஓக.28

தங்கள் தங்கள் பாடசாலைகளில் தவணைப் பரீட்சைகளை நடத்தும் பொறுப்பை ஒவ்வொரு பாடசாலைகளின் அதிபர்களிடமும் கையளிக்க கல்வியமைச்சுத் தீர்மானித்துள்ளது என்று தெரியவருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல்களின் பேரில் தங்கள் தங்கள் பாடசாலைகளில் தவணைப் பரீட்சைகளை நடத்தும் பொறுப்பைப் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்க கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது என்று கல்வி அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அண்மையில் இடம்பெற்று முடிந்த இரண்டாம் தவணைப் பரீட்சைகளின் போது முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் இடம் பெற்றிருப்பதைக் கவனத்தில் கொண்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்வியமைச்சை நெறிப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாகாண கல்வித் திணைக்களங்களும், வலயக் கல்விப் பணிமனைகளுமே தவணைப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்களைத் தயாரித்து அச்சிட்டு விநியோகிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால், இனிமேல் அவர்களிடம் அந்தப் பொறுப்புகள் இருக்காது என்றும் தெரியவருகிறது. கல்வி மைச்சின் இது சம்பந்தப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும் சுற்று நிருபம் விரைவில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரியவருகிறது. (சி)

## சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் சங்க கலந்துரையாடல்

நவாலி, ஓக.28

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களுடனான கலந்துரையாடல் இன்று பி.ப 2.30 மணிக்கு பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து முதியோர் சங்க அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (203-100)

# 20-30 சதவீதமானோர் இலங்கையில் பட்டினி!

கொழும்பு, ஓக.28

இலங்கையில் 20 முதல் 30 சதவீதமான மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள் - என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

ஆசியாவில் நிலவும் வறுமை நிலை தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் ஆசிய நாடுகளின் வறுமை நிலை, பசிக்கொடுமை ஆகியன உச்ச நிலையில் தலைவிரித்தாடுகின்றன என்றும் ஆர்மெனியா, பங்களாதேஷ், கம்போடியா, மொங்கொலியா, இந்தியா, பாகிஸ்தான், கிழக்கு திமோர், இலங்கை ஆகிய நாடுகளில் 20 முதல் 30 சதவீதமான மக்கள் பட்டினியால் வாடுகின்றார்கள் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால், ஆசியாவில் நிலவும் வறுமை, பசிக்கொடுமை ஆகியவற்றை 2015இற்கு முன் இயலுமான வரைக்கும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்கிற தனது நிகழ்ச்சித்திட்ட நிரலை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் ஐ.நா. பலவிதமான சவால்களைத் தொடர்ந்து சந்திக்க நேரும் என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (சி)

## வரணித் தபாலகத்தில் தங்க நகை கண்டெடுப்பு

வரணிப் பகுதி அஞ்சலக ஊழியர்களால் கடந்த 24ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட தங்க நகை அப்பகுதி கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நகையினைத் தவறவிட்டவர் உரிய ஆதாரங் காட்டி [illegible] கிராம அலுவலர் [illegible] அறிவித்துள்ளார். (203-207)

## பெரும் எண்ணிக்கையானோர் பயனடைந்த போசாக்கு விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா காலத்தின் இறுதிப் பத்து நாள்களும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் ''யாழ்.போசாக்கு சமூகம்'' என்னும் அமைப்பால் நடத்தப்பட்ட ஆரோக்கிய வாழ்வுக்கான போசணை வழிகாட்டல் எனும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் ஏறத்தாழ மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் போசணை தொடர்பான ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் பெற்றுப் பயனடைந்துள்ளதாக யாழ். போசாக்குச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.


இந்தப் பயனாளிகள் உடல் திணிவுச் சுட்டி மற்றும் குருதி அமுக்கம் என்பவற்றை அறிந்து தமது ஆரோக்கியத்தையும் அதற்கான போசணை முறைகள் பற்றிய தகுந்த விளக்கங்களையும் பெற்றுள்ளனர்.

இவற்றில் சிறியோர், முதியோர், கற்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் [illegible] வேறுபாடின்றி அனை[illegible] ஆரோக்கிய வாழ்க்கை பற்றி நிறைவான விளக்கத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டோரில் 60 வீதத்துக்கும் கூடுதலானோர் உயர் உடற்திணிவுச் சுட்டியை அதாவது உயரத்துக்கு அவர்களுடைய நிறை கூடுதலாக உள்ளமை மற்றும் நாளொன்றுக்கு கிட்டத்தட்ட ஐந்து பேராவது உயர் குருதியமுக்கம் உடையவர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் இதற்கான பிரதான காரணம் போசணை பற்றிய பூரண விளக்கமின்மையும் குறைந்த உடற்பயிற்சியுமே என தெரிவித்துள்ளனர்.

இந்த விழிப்புணர்வுத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கும் என தாம் நம்புவதாகவும் இனிவரும் காலங்களில் இவ்வாறான பல்வேறு ஆரோக்கியம், போசணை சம்பந்தமான திட்டங்களை உருவாக்கி ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பது தமது திடமான நம்பிக்கை எனவும் அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (203-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டை அரசடி சனசமூக நிலையத்தில் ஆயுள்வேத மருத்துவமுகாம் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.
வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம், பண்டத்தரிப்பு ஆயுள்வேத கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.சிவராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டினேஸ் ஜெயக்குமார் மருத்துவ முகாமை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் ஆனைக்கோட்டை ஆயுள்வேத வைத்திய அதிகாரி டாக்டர் சரஸ்வதி நோயாளர் ஒருவரைப் பரிசோதிப்பதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: சித்தங்கேணிச் செய்தியாளர்)*

# இலங்கை அரசின் செயற்பாடு குறித்து அமெரிக்கா விசாரணை நடத்தவேண்டும்

## நடைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை

கொழும்பு,ஓக.28

இலங்கை அரசினால் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனப்படுகொலைகள், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள், யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச் செயல்கள், வன்முறைகள் ஆகியன குறித்து அமெரிக்காவின் பராக் ஒபாமா அரசு விசாரணை நடத்தவேண்டும் என்று அமெரிக்காவில் நீண்ட நடைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், அமெரிக்க அரசு ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிட்டு தமிழ் மக்களின் அரசியல் விமோசனத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரத்தைச் சேர்ந்த கல்லூரிகளில் பயிலும் ஈழத் தமிழ் இளைஞர்கள் சிக்காக்கோ நகரத்திலிருந்து வோஷிங்டன் நகரம் வரை நீண்ட நடைப்பயணம் ஒன்றை மேற்கொள்வதன் மூலம் இலங்கையின் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாதத்தை பராக் ஒபாமா அரசின் கவனத்துதக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நீண்ட நடைப் போராட்டத்திற்கு சிக்காக்கோ நகரக் கல்லூரிகளில் பயிலும் ஈழத்தமிழ் இளைஞர்களான கண்ணன் ஸ்ரீகாந்தா, விஜய் சிவனேஸ்வரன், ரமணன் திருக்கேதீஸ்வரன் ஆகியோர் தலைமை தாங்குகின்றார்கள் என்றும் தெரியவருகிறது.

நீண்ட நடைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கல்லூரி மாணவர்கள் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தியே தாம் நீண்ட நடைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

இவர்கள் செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் வோஷிங்டன் நகரை அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அங்கு அவர்கள் அமெரிக்க அரசின் உயரதிகாரிகளை நேரில் சந்தித்துத் தமது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க உள்ளார்கள் என்றும் தெரியவருகிறது.

அத்துடன், அவர்கள் இலங்கைத் தமிழர்கள் நலனை வலியுறுத்தி மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(சி)

# வன்னியில் பணி புரிந்த வைத்தியர்களை நிபந்தனையற்ற விதத்தில் விடுதலை செய்க

## மனித உரிமைகளுக்கான மருத்துவ அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு,ஓக.28

பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து பிழையான தகவல்களை வழங்கியவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வைத்தியர்களைப் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதை வரவேற்றுள்ள மனித உரிமைக்கான மருத்துவ அமைப்பு, எனினும் அவர்கள் நிபந்தனையற்ற விதத்தில் விடுவிக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

வைத்தியர்களின் நடமாட்ட சுதந்திரம் தொடர்ந்தும் மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வெளியுலகத் தொடர்பின்றித் தடுத்து வைக்கப்பட்டனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மோதல் நடைபெற்ற பகுதியில் கடமையாற்றிய சின்னத்துரை சிவபாலன் என்ற வைத்தியர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வன்னியில் பாதுகாப்பு வலயத்தில் கடமையாற்றிய நான்கு வைத்தியர்களும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றோம்.

கொழும்பு நீதிமன்றம் அவர்களைப் பிணையில் விடுவித்துள்ளதுடன், வவுனியாவில் உள்ள குற்ற விசாரணைப் பிரிவின் முன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சமூகமளிக்கவேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகள் அவர்களது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

மனித உரிமைகளுக்கான மருத்துவர் அமைப்பு இவ்வாறான நடைமுறைகளைக் கண்டிக்கிறது. வைத்தியர்கள் தமது தொழிலை ஒழுக்காற்றுச் சேவையின் அடிப்படையிலேயே செயற்பட்டனர் எனக் கருதுகின்றது.

தமது நோயாளர்களின் துயரத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக, தடுப்பதற்கான கடப்பாடும் அக்கம் பக்கம் சார்பின்றி செயற்படவேண்டிய பொறுப்பும் வைத்தியர்களுடையது.

வைத்தியசாலையினதும் அதன் தொடர்புபட்ட கட்டடம் ஒன்றின் மீதும் தாக்குதல் இடம்பெற்றால் அதுபற்றி மருத்துவர்கள் தமது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரித்துடையவர்கள். இதற்காக அரசு அவர்களைத் தடுத்து வைப்பதற்கு உரிமை இல்லை என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

# மினுவான்கொடயில் தேடுதல் 3 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு,ஓக.28

கொழும்பின் புறநகர்ப் பகுதியான மினுவான்கொடயில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற தேடுதலில் மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் நடத்திய தேடுதலில் கைது செய்யப்பட்ட இந்த மூன்று இளைஞர்களும் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என உறவினர்கள் தெரிவித்துள்ளன்.

மலையகத்தை சேர்ந்த இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# சீரற்ற காலநிலை காரணமாக மீண்டும் டெங்கு அபாயம்!

கொழும்பு,ஓக.28

இலங்கையில் கடந்த சில மாதங்களாக மிக வேகமாகப் பரவி வந்த டெங்கு நோயின் வேகம் வெகுவாகக் குறைந்துள்ள போதும், தற்போது நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் தலைதூக்கும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன - என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, மழை பெய்யும் காலங்களில் தமது வீட்டையும் சுற்றுச் சூழலையும் சுத்தமாகப் பேணுவதில் பொதுமக்கள் ஒவ்வொருவரும் விழிப்புடன் செயற்படவேண்டும் என சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (சி)

## கூரையிலிருந்து தவறி விழுந்து காயம்

சமையலறை புகைபோக்கி கூரையினை திருத்திய வயோதிபர் தவறிவீழ்ந்து காயமடைந்தார்.இச்சம்பவம் கொடிகாமம், வெள்ளாம் போக்கட்டியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த த.கனகசிங்கம் (வயது 65) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (203-207)

# கைத்தொலைபேசிகளைத் திருடியவர் வெள்ளவத்தைப் போலிஸாரால் கைது!

கொழும்பு,ஓக.28

தனியார் பஸ்களில் பயணிக்கும் பெண் பயணிகளிடமிருந்து கையடக்கத் தொலைபேசிகளைத் திருடி வந்த நபர் ஒருவரை வெள்ளவத்தைப் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

கொழும்பு, காலி வீதியில் பயணம் செய்யும் தனியார் பஸ்களிலேயே இந்த நபர் தனது கைவரிசையைக் காட்டி வந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளவத்தைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இந்த நபரிடமிருந்து 34 கையடக்கத் தொலைபேசிகளை பொலிஸார் கைப்பற்றியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மொறட்டுவை, கல்கிஸை, பாணந்துறை நோக்கிச் செல்லும் பஸ்களில் பயணஞ் செய்யும் பெண்களின் கைப்பையை இரகசியமாக வெட்டி, அவற்றிலிருந்த கைத்தொலைபேசிகளைத் திருடி வந்தவர் என சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கையடக்கத் தொலைபேசிகள் காணாமல் போனவர்கள் இருப்பின் அவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வந்து அவற்றை அடையாளம் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (சி)


**Apply Now Sep/Oct 2009 Intake**

குறைந்த கட்டணத்தில் UK யில் கல்வி கற்க
BA, BBA, MBA, BSc, MSc,
After graduation two years workpermit
DENTAL NURSE? SOCIAL CARER? GENERAL NURSE?
With Possible Employment Or... What would you like to become tomorrow?

VISA CONSULTANCY
to Any Country, Any Category
Fresh, Re Apply, Appeal
Filling visa application forms
Lawyer's Guidance,100% Success Rate

Nursing Courses,
Pharmacy Courses,
Certificate Courses,
Diploma Courses,
Undergraduate Courses,
Postgraduate Courses
and many more courses.......

Student Loan, Sponsor Facilities available
Conditions apply

UK, USA, CANADA, AUSTRALIA, UKRAINE, POLAND, BELARUS FRANCE, GERMANY, ITALY, SWISS, RUSSIA, NEW ZEALANDஆகிய நாடுகளுக்கான Student, Visit Business, Migration மற்றும் Settlement, Working holiday Maker ஆகியவற்றுக்கான (Visa) ஒழுங்குகள் மற்றும் Documentation செய்து தரப்படும்

சகல பாடநெறிகளும் குறைந்த கட்டணத்துடன் பயிலும் வசதி
அடிப்படை தகைமை O\L. IELTS அவசியமில்லை

PARANAN ASSOCIATES (PTE) LTD
403,1/1 Galle Road, Wellawatte, Colombo- 6. T.P:2551241 Fax:2507932
Mobile:0777-370292 www.paranan.com email: info@paranan.com
Universal College of Education
Tel: 7203343, 0777-877176






இன்று (28.08.2009) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும் நந்தகுமார் - கோமதி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹர்சனை அப்பா, அம்மா, அண்ணாமார் துஷ்யந்தன், வேணுஷன், அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா குடும்பத்தினர், சுதா மாமா குடும்பத்தினர், அபாஸ் மாமா குடும்பத்தினர், சுதா சித்தப்பா குடும்பத்தினர், றஜனி சித்தப்பா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர் ஹர்சனை இறைவன் அருளால் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
த.நவரத்தினம்
(அம்மப்பா).
(88186)



ஸ்ரீ சுவர்ணா சனசமூக நிலையம்
ஸ்ரீ சுவர்ணா ச.ச.நி. வளர்ச்சி நிதிக்கான
மாட்டுவண்டிச் சவாரி
காலம்:- 30.08.2009 ஞாயிறு பி.ப. 2 மணிக்கு
இடம்:- நீர்வேலி சவாரித்திடல்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-நிர்வாகம்.
(88248)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டத்திலுள்ள பிராந்திய வைத்தியசாலைகளில்

# 20 வருடங்களுக்கு மேலாக வைத்திய நிபுணர்களின் நியமனங்கள் எவையும் இடம்பெறவில்லையாம்

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிராந்திய வைத்தியசாலைகளில் 20 வருடங்களுக்கு மேலாக வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்படவில்லை.

இந்நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றோம்.

யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் 2 பிராந்திய வைத்தியசாலைகளில் தற்போது 37 வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

அந்த வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு 17 வைத்திய நிபுணர்கள் தேவையானபோதும் இதுவரைக்கும் ஒரு வைத்தியநிபுணர்கூட நியமிக்கப்படவில்லை.

இதுதவிர 88 வைத்திய உத்தியோகத்தர்கள் தேவையானபோதும் 16 பேர் மட்டுமே தற்போது கடமையாற்றுகின்றனர்.

சுகாதார வைத்திய அதிகாரி பதவிகளுக்கு 12 பேர் தேவையானபோதும் ஒருவர் மட்டுமே தற்போது கடமையாற்றுகின்றார்.

பதிவு வைத்தியர் 58 பேர் தேவையான போதும் 19 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். மருந்தாளர் பதவிக்கு 28 பேர் தேவையான போதும் 11 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். ஆய்வுகூடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு 18 பேர் தேவையானபோதும் 2 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். எக்ஸ்ரே படப்பிடிப்பாளர் பதவிக்கு 7 பேர் தேவையானபோதும் 2 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

தாதிய உத்தியோகத்தர் பதவிக்கு 308 பேர் தேவையான போதும் 70 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். குடும்ப நல உத்தியோகத்தர் பதவிகளுக்கு 351 பேர் தேவையாக உள்ளபோதும் 141 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு துறைசார் வெற்றிடங்கள் நிலவுகின்ற போதும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றோம் என்றார். (9)

# அனுமதிக்கு மேலாகக் கொண்டு செல்லப்பட்ட மரக்குற்றிகள் நீதிமன்றத்தால் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஓக 28

பிரதேச செயலகத்தில் பெறப்பட்ட அனுமதிக்கு மேலாக மரக்குற்றிகள் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டதால் மரக்குற்றிகள் அனைத்தையும் பறிமுதல் செய்து மரக்கூட்டுத்தாபனத்திடம் கையளிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மரக்குற்றிகளை ஏற்றி வந்த வாகனத்தின் சாரதி மற்றும்உதவியாளர் இருவர் ஆகியோருக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதம் செலுத்தத் தவறின் தலா 5 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

வாகனத்தில் கொண்டுவரப்பட்ட மரக்குற்றிகளைப் பறிமுதல் செய்து மரக்கூட்டுத்தாபனத்திடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார். (203-207)

# சுண்டுக்குளிப் பகுதியில் வீடொன்றில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.சுண்டுக்குளிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இந்தத் திருட்டுச்சம்பவம்கடந்தசெவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில் உள்ள சம்பந்தப்பட்ட வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அங்கு வீட்டுக்காரர்கள் உறக்கத்தில் இருந்தவேளை அங்கிருந்த பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். உடுபுடைவைகள், பணம் மற்றும் பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (203-224)

# கோதுமை மாவை 74 ரூபாவாக விற்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.மாவட்டத்திற்கு கப்பல் மூலம் தருவிக்கப்பட்டு மாவட்டச் செயலகத்தினால் ப.நோ.கூ.சங்கங்களுக்கு 71 ரூபா விலையில் வழங்கப்பட்டு வரும் கோதுமை மாவினை ப.நோ.கூ.சங்கங்கள் 74 ரூபாவாக விற்பனை விலையில் விநியோகிக்குமாறும் அரச அதிபர் கேகணேஷ் கேட்டுள்ளார்.

இதற்குரிய வழங்கல் கட்டளைகளை மாவட்டச் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக் கொள்ளுமாறும் ப.நோ.கூ.சங்கங்களை அவர் கேட்டுள்ளார். நேற்று முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது. (1)

# சம்பளப் பட்டியலில் கையொப்பம் வாங்க அலைந்து திரியும் பாடசாலை அதிபர்கள்

யாழ்ப்பாணம், ஓக 28

சம்பளப் பட்டியலில் ஆசிரியர்களிடம் கையொப்பம் பெறுவதற்கு அதிபர்கள் அலைகின்றனர்.

கடந்த 8 ஆம் திகதி விடுமுறைக்காக மூடப்பட்ட பாடசாலைகள் எதிர்வரும் ஏழாம் திகதி மீண்டும் மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் கடந்தவாரம் ஆசிரியர்களுக்கான ஓகஸ்ட் மாதச் சம்பளம் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

வங்கிகளில் தமது சம்பளத்தினைப் பெற்ற ஆசிரியர் சம்பளப் பட்டியலில் ஒப்பமிட பாடசாலைகளுக்குச் செல்லவில்லை

இதனால் மாத முடிவுக்குள் சம்பளப் பட்டியல் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டுமென்பதால் அதிபர்கள் சம்பளப் பட்டியலுடன் ஆசிரியர்களின் வீடுகளுக்குச் சென்று பட்டியலில் ஒப்பம் பெறுவதற்கு அலைவதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)



ஹற்றன் நஷனல் வங்கியின் பங்கு தரகர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு பிள்ளையார் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது.

பங்குத் தரகர்களுக்கான நிதியியல் ஆலோசகர் எஸ்.வசந்தகுமார் உரையாற்றுவதையும் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் பீடில் மற்றும் பங்கு தரகர்கள்அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சண்டிலிப்பாயில் கால்நடை வைத்தியசாலை அமைக்க பொருத்தமான காணி இல்லாமையால் சிரமம்

சண்டிலிப்பாய், ஓக. 28

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் அமைப்பதற்குப் பொருத்தமான காணி கிடைக்காததால் நிரந்தரக் கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இப்பிரதேசத்தின் மத்தியில் கட்டடம் அமைப்பதற்கான ஒரு காணியைத் தந்துதவுமாறு வலி.தென்மேற்கு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி மக்களிடம் கோரியுள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நன்மை கருதி டச்சு வீதியிலுள்ள ஒரு வாடகை வீட்டில் கால்நடை வைத்திய அலுவலகம் இயங்கி வருகின்றது.

பல வருடங்களாக வாடகை வீட்டில் இயங்கிவரும் இந்த அலுவலகத்திற்கு நிரந்தரமான ஒரு கட்டடத்தை அமைப்பதற்காக இப்பகுதி மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சியைத் தொடர்ந்து பிரான்பற்றுப் பகுதியில் காணியும் கிடைத்தது.

ஆனால் சண்டிலிப்பாய் பிரதேசத்தின் ஒதுக்குப்புறமான பகுதியில் இக்காணி கிடைத்ததினால் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனவே அனைத்து மக்களுக்கும் வசதியாகப் பிரதேச மத்தியில் பொருத்தமான காணியைத் தேடுவதில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். (203-115)

# கல்வயல் விவசாய சம்மேளன நெற் செய்கையாளர்களுக்கு இலங்கை வங்கியால் கடன்

யாழ்ப்பாணம், ஓக.28

சாவகச்சேரி கல்வயல் சம்மேளனத்தைச் சேர்ந்த 50 நெற் செய்கையாளர்களுக்கு இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையினால் கடன் வழங்கப்பட்டுள்ளது.

கடனுக்கான விண்ணப்பப் படிவங்கள் நாளை சனிக்கிழமை கல்வயல் பொது நோக்கு மண்டபத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாக சம்மேளனப் பொருளாளர் அ.பற்குணநாதன் தெரிவித்தார். (203-207)

கைதடி முதியோர் இல்லத்தில்

# முதியோர் தினத்தை முன்னிட்டு போட்டிகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 28

கைதடி அரச முதியோர் இல்லத்தில் இம்முறை சர்வதேச முதியோர் வாரத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதியோர் இல்ல அத்தியட்சகர் என். இராஜலிங்கம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இம்முறை முதியோர் வாரத்தை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, கவிதை போன்ற போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனைவிட சிரமதானம் மற்றும் பொது வேலைத்திட்டங்களில் ஈடுபடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் மத்தியில் பேச்சு, அபிநயப் பாடல்கள் மற்றும் பாட்டுப் போட்டிகளை நடத்தி அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

சர்வதேச முதியோர் வாரம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. (203-224)



அச்சுவேலி இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையில் நடைபெற்ற இலங்கை வங்கியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர். [illegible] அச்சுவேலிக் கிளையின் குடும்பத்தினர் சகிதம் மகிழ்வதை முதலாவது படத்திலும் வில்லிசைப் புலவர் கலாவிநோதன் கே.என். [illegible] செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 28

2005ஆம் ஆண்டு பட்டதாரி வேலைத்திட்டத்தின் கீழ் ஆள்சேர்ப்புச் செய்து புதிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப் படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் 0602262951 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட் கப்பட்டுள்ளனர். (204)


## மதன் எலக்ரோனிக்ஸ்



யாழ் மாவட்டத்தில் எங்குமே இல்லாத மாபெரும் Sale தற்போது பல புதிய வகையான T.V விற்பனையில்.

- Sony KVG21P1, KVG21P2, KVG21Q1, KVG21Q2
- Sony Wega KVBT21, KVXA21, KVXF21, KVXA25, KVXF25, KVXF29

இன்னும் பல புதிய வகைகளுடன்
21", 25", 29", 14" T.V கள் மிகவும் குறைந்த விலையில்

- 5 வருட உத்தரவாதத்துடன் (100% வீதம்)
- யாழ்.மாவட்டத்தின் எந்தவொரு மொத்த வியாபாரிக்கும் விசேட விலை
- யாழ்மாவட்டத்திலுள்ள நிறுவனங்கள் மற்றும் தங்குமிடங்கள், ஹொட்டல்கள் விசேட விலையில் விற்பனை மற்றும் விற்பனைக்குப் பின்னான 100% சேவை
- இச்சலுகைகள் யாவும் கையிருப்பு உள்ளவரை மட்டுமே
- என்றும் உங்கள் நம்பிக்கைக்குரியவர்கள் நாங்களே உடனே நாடுங்கள்.

மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைச்சந்தி, மானிப்பாய்.
T.P 077 7448668
021 7901574

பர்ணபாஸ் எலக்ரோனிக் சென்ரர்
360/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதியில்)
T.P 077 7448668
021 7900728

(88235)


## மரண அறிவித்தல்கள்



### பீற்றர் பொன்கலன்

(உரிமையாளர், கிப்ஸ்சலா தச்சுத் தொழிற்சாலை)


அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்.மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பீற்றர் பொன்கலன் (25.08.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டோமினிக் எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மனவல்- றோஸ்மலர் தம்பதியரின் அன்பு மருமகனும் அன்ரனி அம்மாவின் அன்புக் கணவரும் கிப்ஸ்சலா (சுவிஸ்), கனிஸ்ரா, ரகு (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இயேசுதாசன், அருள்தாசன், காலஞ்சென்றவர்களான இம்மனுவல், ஜேம்ஸ் விஜயன் ஆகியோரின் அன்பு மாமனும் கிசாந்தி, டொனால்ட், ஜெனிபா ஆகியோரின் அன்புப் பேரனும் றீற்றா, விக்ரர் சேவியர் (குணம்), அன்ரன் அஞ்சலோ (போதகர்), பிறிற்றோ மைக்கல் (போதகர்), பேனாட், சுசிலா, நிர்மலா, அன்ரூ ராஜசூரியர் (போதகர்), டேவிற் பாலசூரியர் (போதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.08.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.33, மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம். (88229)

தகவல்:
அன்ரன் அஞ்சலோ.



### சின்னத்தம்பி கந்தசாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி, யா/இந்து தமிழ்க் கலவன் பாடசாலை- நீர்வேலி)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி (24.08.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்- நீர்வேலி) அன்புக் கணவரும் பிரபாகரன் (கனடா), சுதாகரன் (லண்டன்), ஆனந்தி (ஆசிரியை, யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை- நீர்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சூரியலதா, நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் அபினாஷின் அன்புப் பேரனும் கந்தையா (மட்டுவில்), சரஸ்வதி (கொழும்பு), கந்தசாமி (கொழும்பு), செல்வராசா (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும் விநாயகமூர்த்தி (கொழும்பு), காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ஸ்ரீ புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2009) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி லேன்,
நீர்வேலி மத்தி, நீர்வேலி. (88213)

தகவல்: க.நந்தகுமார்
(மருமகன்).

# வடமராட்சி வலயப் பாடசாலைகளின் சமூக விஞ்ஞான பொருள்காட்சி முடிவுகள்

கரவெட்டி,ஓக.28

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சமூக விஞ்ஞான பொருள்காட்சி முடிவுகள் வெளியாகியுள்ளன. போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு: இதன் ஒருபகுதி 26.08.2009 ஆம் திகதிய உதயனில் வெளியாகியிருந்தது.

தரம்-8 தி.குருபரன் (வல்வை சிவகுரு வித்.), க.சத்தியாயுதன் (உடுப்பிட்டி அ.மி.க.), றொ.லிவின்சன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி.), கு.அருள்ஜெனனி (மெதடிஸ்த பெ.உ.பா.), ர.ராகவேந்திரன் (உடுப்பிட்டி அ.மி.க.).

தரம்-9 இ.சிந் துஜா (உடுப்பிட்டி மகளிர் கல்.), செ.சிந்துஜன் (விக் னேஸ்வரக் கல்லூரி), சி.பார்த்தீபன் (விக்னேஸ்வரக் கல்லூரி), சி.நிதர்சன், பா.சிவகீதன் (தும்பசிட்டி மெ.மி.த.க.பா.), சி.சிவாஞ்சனி (தொண்டைமானாறு வீ.ம.வி.).

கடற்றொழிலும் உணவுத் தொழில்நுட்பமும்

தரம்-10 கு.பிறேம்நாத், பா.கேதீசன் (வல்வை சிவகுரு வித்.), நா.கலைவாணி, உ.விதுஷா (உடுப்பிட்டி மகளிர் கல்.), ர.கோமதி (வல்வை மகளிர் கல்.), அ.வின்சன்ஜோர்ச் (பொலிகண்டி இ.த.க.பா.), சி.சாளினி (உடுப்பிட்டி மகளிர் கல்.).

தரம்-11 ஞா. பிரான்சிஸ் ஜெயசீலன் (மணற்காடு றோ. க.த.க.பா.), ம.தனுஷன் (வேலாயுதம் ம.வி.), ஸ்ரீகிருஷாந்தி, பா.மாலினி (வல்வை மகளிர் கல்.), கே.பிரமாகரன் (வல்வை சிவகுரு வித்.), ஆ.ஆனந்தபவான் (பரு.சித்தி விநாயகர் வித்.),

ஆக்கத்திறன் தொழில்நுட்பம்

தரம்-10 ச.சுஜீபன் (உடுப்பிட்டி அ.மி. கல்.), ஜெ. குகசாந் (தொண்டைமானாறு வீ.ம.வி.), க.லக்ஷன் (நெல்லியடி ம.ம.வி.), ந. நந்தகுமார் (தொண்டைமானாறு வீ.ம.வி.), ர.ரகுராம் (தேவரையாளி இந்துக் கல்.).

தரம்-11 ச. சஜீபன் (உடுப்பிட்டி அ.மி.க.), த. தனுபரன் (ஹாட்லிக் கல்.), ம.தனுசன் (ஹாட்லிக் கல்.), ஏ.சிறீதரன் (ஹாட்லிக் கல்.), வா. வசீலன் (தேவரையாளி இந்துக் கல்.),

கர்நாடக சங்கீதம்

தரம்-6 சி.சங்கவி (வட.இந்து மகளிர் கல்.) - சப்தஸ்வர விளக்கம், உ.தனுசா, செ.விதுசன் (வல்வை சிவகுரு வித்.)- ஆரோகண, அவரோகண விளக்கம், வி.றொக்சி (வட. இந்து மகளிர் கல்.) - சப்தஸ்வர விளக்கம்.

தரம்-7 தெ.நிரூபன் (வல்வெட்டி இ.த.க.பா.) - புத்தளிப்பு கருவிகள், பா.நர்மதா (வட. இந்து மகளிர் கல்.) - சப்ததாள விளக்கம்.

தரம்-8 சூ.சுஜிதா, அ.கேமலதா (வடமராட்சி ம.ம.கல்.) - வீணையின் மாதிரியுரு, தி.குருபரன்-பன்னிரு ஸ்வரஸ்தானங்கள் (வல்வை சிவகுரு வித்.), தே.ஐஸ்வர்யா (வட. இந்து மகளிர் கல்.) - சப்தஸ்வரங்கள், த.கீர்த்தனன் (பொலிகண்டி இ.த.க.பா.) - வயலின் மாதிரியுரு, பொ. துசாந்தினி (வல்வெட்டி இ.த.க. பா.) - வயலின் மாதிரியுரு.

தரம்-9 அ.கஜேந்தினி (வல்வெட்டி இ.த.க.பா.) - கானசபா, செ.நீலாம்பரி (உடுப்பிட்டி மகளிர் கல்.) - துளைகருவிகளின் மாதிரி யுரு, சி.தர்சன் - (ஹாட்லிக் கல்.) - நாட்டார் பாடல்கள் விளக்கம், மு. சஞ்சிகா (ஞானாசாரியார் கல்லூரி) - கலை அரங்கம், பா.லக்சனா (வட. இந்து மகளிர் கல்.) - மிருதங்கம் மாதிரியுரு.

தரம்-10 ஜெ.மயூரி ஜெயா (வட.இந்து மகளிர் கல்.) - வீணையின் மாதிரியுரு, குழு- (வல்வை மகளிர் ம.வி.) 35 தாளஅமைப்பு, ம. அனோஜா (வல்வெட்டி இ.த.க. பா.) - 35 தாள அமைப்பு, த. பிரசன்னவதனன் (ஹாட்லிக் கல்.)- அப்பியாச சபாகான உருப்படிகள், கு.அபர்ணா (கம்பர்மலை வித்.) - 35 தாள அமைப்பு.

தரம்-11 குழு- (வல்வை மகளிர் ம.வி.)- 72 மேளகர்த்தா அமைப்பு, குழு- (வல்வெட்டி இத.க.பா.) - 72மேள கர்த்தா அமைப்பு , சா.பிரசாந் (ஹாட்லிக் கல்.) - இசைக் கருவிகளின் மாதிரியுரு, ஸ்ரீ. தேவகி (மெதடிஸ்த பெ.உ.பா.) - இசையரங்கம், குழு- (வல்வை சிவகுரு வித்தி.)- இராகச் சக்கரம்.

தரம் 6 சமூகக்கல்வி

குழு - (பரு.சித்திவிநாயகர் வித்தி.)

வரலாறு

ஜெ.ஜெயன் (நெல்லியடி ம.ம.வி.), ர. பிரவின்சன் (தொண்டைமானாறு வீ.ம. வி.), ஜெ.புருசோத் (உடுப்பிட்டி அ.மி. க.), மு.நிதுர்சிகா (இமையாணன் அ.த.க. பா.),

தரம்-6 புவியியல்

ச.சுகந்தியா (கம்பர்மலை அ.த.க.பா.), உ.தர்சனா (வட.ம.ம.கல்.), செ.சுஜாந்தன் (விக்னேஸ்வராக் கல்.), குழு- (வேலாயுதம் ம.வி.), வி.வினோஜிதன் (பொலிகண்டி இ.த.க.பா.)

தரம்-7 வரலாறு: சை.சுபவாசினி (வட.ம. ம. கல்.), இ. தூரிகா (மெதடிஸ்த பெ.உ. பா.), ந.நவஜோதி (உடுப்பிட்டி மகளிர் கல்.), ம.விஜேதா (தொண்டைமானாறு வீ.ம.வி.), ஆ.மணிமேகலா (விக்னேஸ்வராக் கல்.)

தரம்-7 புவியியல்: ம.நிதர்சினி (நெல்லியடி ம.ம.வி.), றொ. விதுசன் (கலட்டி றோ. க.த.க. பா.), செ. கோபிசங்கர் (அல்வாய் வடக்கு றோ.க.), ப.மதுசன் (உடுப்பிட்டி அ. மி.க.), பா.பாரதி (உடுப்பிட்டி மகளிர் கல்.).

தரம்-8 வரலாறு: குழு (ஹாட்லிக் கல்.), நி. நிர்த்தனா (விக்னேஸ்வராக் கல்.), குழு- (நெல்லியடி ம.ம.வி.), குழு- (பொலிகண்டி இ.த.க.பா.), சா. சஜீபன் (வேலாயுதம் ம.வி.), குழு-(மெத டிஸ்த பெ.உ.பா.)

தரம்-8 புவியியல்:

குழு- (மெதடிஸ்த பெண்கள் உ.பா.) ஜெ.செவ்வந்தி (வடமராட்சி ம.ம.கல்.), குழு- (மெதடிஸ்த பெ.உ.பா.), குழு- (வேலாயுதம் ம.வி.), ஜெ.ஜெயரூபன் (தொண்டைமானாறு வீ.ம.வி)

தரம்-9 வரலாறு:

குழு- (வட. இந்து மகளிர் கல்.), பு.தர்சன் (நெல்லியடி ம.ம.வி.), ஆ. மதிசுதன் (உடுப்பிட்டி அ.மி.க.), ப. விதுர்சா (உடுப்பிட்டி மகளிர் கல்.), இ.தமிழ்நிலா (வல்வை சிவகுரு வித்.),

தரம்-9புவியியல்: க.உகந்தன் (நெல்லியடி ம.ம.வி.) வே.கணேசலிங்கம் (தம்பசிட்டி மெ.மி. த.க.பா.), குழு- (ஞானாசாரியார் கல்.), சி.பார்த்தீபன் (விக்னேஸ்வராக் கல்.), ர.கிறிஸ்டியன் (பொலிகண்டி இ.த.க.பா.).

தரம்-9 வரலாறு:

குழு- (மணற்காடு றோ.க.த.க.பா.), குழு-(மெதடிஸ்த பெ.உ.பா.), தே.கோகுலன் (கொற்றாவத்தை அ.மி.த.க.பா.), ச.நித்தியா (வல்வை மகளிர் கல்.), குழு- (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.),

தரம்-11 வரலாறு

குழு- (வேலாயுதம் ம.வி.), க.ரமணன் (யார்க்கரு விநாயகர் வித்.), குழு- (வடமராட்சி ம.ம.வித்.), செ. அருந்துஷன் (நெல்லியடி ம.ம.வி.), பா.துவாரகா (கரணவாய் ம.வி.). *(முற்றும்)* (70)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 . 12 . 1928



ஆண்டவன் அடியில்
23 . 08 . 2004

### அமரர் செல்லையா தியாகராஜா
(முன்னாள் உதவி ஆணையாளர், மதுவரித் திணைக்களம்)

ஆண்டுகள் ஐந்து ஆனதப்பா!
ஆறாத் துயரில் நாம் உள்ளோம்
ஆலய விளக்காய் மிளிரும்- உங்கள்
நினைவுகள் எம்மை வாட்டுதப்பா!
நாளும் உங்கள் நினைவினிலே
நாம் தவித்து நிற்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.

116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(88231)

## 50ஆவது அகவையில் விண்ணக வாழ்வின்
6ஆம் ஆண்டு நிறைவில் கண்ணீர்ப் பூக்கள்...

வித்தாக தாயின் மடியில்
03.04.1959

விதியின் சதியால் ஆண்டவன் அடியில்
03.09.2003

திதி: பூர்வபக்க அட்டமி
(28.08.2009)



அமரர்
### வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

ஆறு வருடங்களாய் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்ட ஆண்டவனே
நீளாத்துயில் கொள்ளும் தூயவரை எழுப்பிவிடும்!

மூவிரு ஆண்டுகளாய் எம் விழிகளில் பெருமழை கோலமையா!
பெரும் புகை மூட்டமையா!

விழித்திரையில் உம் விம்பம் ஒழிந்திருக்குதையா
கண்ணீரின் நடுவினிலே உம் உருவம் ஆடுதையா!

சாவு என்ற சதிகாரன் விரித்த வலை மீதினிலே - எங்கள்
சந்தோசம் அத்தனையும் சமாதி ஆனதையா!

கொஞ்சிக் குலவிக் களித்திருந்த தந்தைமுகம் - நெஞ்சில்
என்றும் நிலைத்திருக்கும் அன்புச் சரம்!

வறுமைதனை தோள்சுமந்து நெஞ்சமதில் எமைச் சுமந்து
துன்பம் சிறிதுமின்றிச் சீராட்டி வளர்த்தீர் அப்பா!
நாமுயரும் வேளையிலே எங்கு சென்றீரப்பா?

கடல் கடந்த தேசத்தில் நாமிருந்தாலும் காதலே நமக்கு
நாம் தவழ்ந்த மண்மீது நீர் சிந்திய வியர்வை முத்துக்களாய்
நாம் இன்று சிறப்புடனே வாழ்கின்றோம்!

கருணை பொங்கும் தந்தைமுகம் காணமனம் ஏங்குதையா?
மரணம் ஏது உந்தனுக்கு எங்களுக்குள் எப்போதும் வாழ்கின்றீர்!

மருமகனின் மனதிலும் மாமனைக் காணாத வாட்டம்!
அவர் கண்ணிலும் அருவியென நீர் ஓட்டம்
அருகினில் வந்து ஆறுதல் கூறுமையா!

ஏ9 தான் திறந்தாச்சு மறுபடியும் - ஏனோ
நீர்தான் இன்னும் வரக் காணோம்!...

பெருமூச்சைத் தவிர எம்மிடம் ஏதும் இல்லை!
இந்த உயிர் மூச்சு நடைப்பிணமாய் வாடுதையா!

ஸ்ரீரங்கம், 374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்.

(88150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழாய் மூலம் வழங்கப்பட்டுவரும் குடிதண்ணீர் வீட்டுத் தோட்டங்களுக்கு பயன் படுத்தப்படுகின்றது

## நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகள் முடிவு

சண்டிலிப்பாய், ஓக.28

மக்களின் நன்மை கருதி குழாய் மூலம் வழங்கப்பட்டு வரும் குடிதண்ணீர் வீட்டை அழகுபடுத்தும் மரங்களுக்கும் வெற்றிலைத் தோட்டங்களுக்கும் பயன்படுத்தப் படுகின்றது.

சுன்னாகம், கந்தரோடை மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் பல வருடங்களுக்கு முன்னிருந்து தேசிய நீர் வழங்கல் அதிகாரசபையினால் இப்பகுதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் குடிதண்ணீர் கடந்த இரு வாரங்களுக்கு முன்பு கட்டுடைப் பகுதி மக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் வழங்கப்பட்டு வந்த இக்குடிதண்ணீரை கந்தரோடையைச் சேர்ந்த ஒரு சிலர் தங்கள் வீட்டுப் பூந்தோட்டத்திற்கும் வெற்றிலைத் தோட்டத்திற்கும் பயன்படுத்தி வருவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

குடிதண்ணீருக்கு கஷ்டப்பட்டு வந்த மக்களுக்காக பல லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டு குழாய் மூலம் விநியோகிக்கும் குடிதண்ணீரை சுயநலத்திற்காக தவறாகப் பயன்படுத்திய இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முன்வந்துள்ளார்கள்.

(203-115)

# சாவகச்சேரி கமநல சேவைகள் பிரிவில் நெற் செய்கையாளர்களுக்கு விதைநெல்

யாழ்ப்பாணம், ஓக.28

சாவகச்சேரி கமநல சேவைகள் பிரிவுக்குட்பட்ட இரண்டு ஏக்கர் காணியில் நெல் பயிரிடப்படவுள்ள நெற் செய்கையாளர்களுக்கு 6 புசல் விதை நெல்லும், உற்பத்திச் செலவாக வட்டியில் லாத கடனாக 20 ஆயிரம் ரூபாவும் வழங் கப்படவுள்ளது.

மேற்படி பிரதேச கமநலசேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு விதை நெல் வழங்குவது தொடர்பாக கடந்த சனிக்கிழமை கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டது.

நெல் அறுவடையின் போது ஏக்கருக்கு 50 புசல் நெல் வீதம் மீள வழங்க வேண்டும் எனவும் கூட்டத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-201-207)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக.28

வல்வை நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் இடம் பெறும். (204)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக.28

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கு, பண்டாரகுளம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறும். (204)

★ ★ ★

வடமராட்சி, ஓக. 28

மந்திகை, கரிகம்பன் ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

10 தினங்கள் இடம்பெறும் திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவுறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 6 மணிக்கு ஆன்மீக சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன. (204-236)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக.28

வடமராட்சி, பொலிகண்டி உப்புக்கிணற்றடி சித்திவிநாயகர் ஆலய பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

10 தினங்கள் நடைபெறும் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

பெருந்திருவிழா பிரதமகுரு வேதாகமக் கிரியகலாபூஷணம் சிவஸ்ரீ.தி.கிருஷ்ணமூர்த்தி குருக்கள் தலைமையில் திருவிழாக் கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

(204-207)

# இறைவன் மீது உண்மையான அன்புடன் செய்யப்படும் செயலே புண்ணியச்செயல்

ஞானக்கதிர்

ஒரு பெரியார் தீபாவளி பற்றி ஒரு கோயிலில் பிரசங்கம் செய்தார். நரகாசுரன் செய்த கொடுமைகளையும் அதனால் அவனை மகாவிஷ்ணு சங்காரம் செய்ததையும் ஆட்சியில் மதுவும், மாமிசமும், கொலையும் அழுக்கும் நிறைந்த கொடுமைகளே நிலவச் செய்தேன். இன்று நான் இறக்கும் நாளில் எல்லாரும் அவற்றை விடுத்துத் தூய்மையாகப் புதியன புனைந்து கடவுளை வழிபட்டு மகிழும்படியான வரம் தர வேண்டுமெனக் கேட்டுப் பெற்றான். ஆனால் இங்கு பார்த்தால் அன்றுதான் நரகாசுரன் போல மக்கள் நடந்து கொள்கிறார்களே என்றார். சபையில் ஒருவர் சொன்னார். ''நரகாசுரன் நீங்கள் சொன்னது போல வரம் கேட்கவில்லை. இன்றொருநாளாவது என் எனைப்போல் இருக்க வேண்டும் என்றுதான் வரம் கேட்டான். அதனால்தான் தீபாவளி இப்படிக் கொண்டாடப்படுகிறது'' என்றார். பிரசங்கக்காரர் திகைத்துப் போனார்.

இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. மக்கள் சமயத்தையும், புராணக் கதைகளையும் உண்மையுணராமல் தங்கள் கீழ்த்தர உணர்வுகளுக்கு சாதகமாக்கிக்கொள்கின்றார்கள். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர்தான் உண்மையான சமய நெறியில் அறவாழ்வு வாழ்கின்றார்கள். போலிகள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. அதற் கேற்ப அவலங்களும் அமைதியின்மையும் நாளும் பொழுதும் அதிகரிக்கின்றன.

எனவே எமது சமய வாழ்வில் அடிப்படையில் உள்ள தவறு என்ன என்பதைச் சிந்திக்க வேண்டியது அறிவுடையார் கடமையாகிறது. சைவசமய சாஸ்திரங்களும் திருமுறைத் தோத்திரங்களும் இந்த உண்மையைத் தெளிவாகச் சொல்லிவைத்துள்ளன. ''அரன்தன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண் செயல்' என்பது சைவ சித்தாந்த சாஸ்திரமாகிய சிவஞான சித்தியார் கூறும் உண்மை.

ஔவையார் ஆம் செயல், போம்செயல் என்று நம் செயல்களை இரண்டாக வகுத்துக் காட்டுகின்றார்கள். ''புண்ணியம் ஆம், பாவம் போம்'' செயல் பாவம், புண்ணியங்கள், அறங்கள் எனப்படும் வேதாகமங்கள் முதலான உண்மை நூல்கள் விதித்தவற்றைச் செய்தல் அறம். விலக்கியவற்றைச் செய்தல் பாவம்.

வெளிக்காட்சிக்கு அறசெயல்கள் போல காட்சி அளிப்பன எல்லாம் அறமாவதும் இல்லை. வெளிக்காட்சிக்குப் பாவச்செயல்கள் போல காட்சி அளிப்பன எல்லாம் பாவம் ஆவதும் இல்லை. காட்சி மாத்திரத்தில் புண்ணிய பாவங்களை முடிவு செய்யக்கூடாது. இறைவன் மீது உண்மையான அன்புடன் செய்யப்படும் செயலே புண்ணியச் செயல். ஏனையவை பாவச் செயல்களே.




சாவகச்சேரி அமிர்தபாஷிணி சமேத சந்திரசேகர வாரிவனேஸ்வர ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழாவின்போது சந்திரசேகரப் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.






மீசாலை வடக்கு, சீரவளவு ஞானவைரவர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வையும், மண்டலாபிஷேக தினத்தில் ஞானவைரவப் பெருமான் உள் வீதி வலம் வந்து அடியார்களுக்கு காட்சி கொடுப்பதையும் காணலாம்.

கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் குருபூசை நிகழ்வில் சுவாமி வீதியுலா வருகிறார்






பிரசித்தி பெற்ற நவாலி கதிர்காம முருகன் ஆலய தீர்த்தத் திருவிழாவின் போது ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.மா.பத்மநாதன் சுவாமிக்கு விசேட தீபாராதனை செய்வதையும் அடியார்கள் வழிபாட்டில் ஈடுபட்டுள்ளதையும் இங்கு காணலாம்.

(படம்: இரா.சுதா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சரசாலை பொது நூலகம் அபிவிருத்திச் சபையினர் தேசிய வாசிப்பு மாதம் 2008இற்கான நிகழ்வினை அண்மையில் நூலக மண்டபத்தில் நடத்தினர்.
நிகழ்வில் பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் உரை நிகழ்த்துவதையும் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தம், நூலகர் இ.தர்மலிங்கம் பிரதேசசபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி கௌ.விக்னகுமார் ஆகியோர் அமர்த்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

## மதில் கட்டுவதற்கான கூறுவிலை

எமது சங்கத்தின் எல்லைப்புற வேலிக்கு மதில் கட்டுவதற்கான கூலிக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. எனவே வேலை தொடர்பான விவரங்களை அலுவலகத்தில் பார்வையிட்டு கூறுவிலையை 05.09.2009ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (இ/560484)

# 17ஆவது திருத்தத்தை அமுல்படுத்திவிட்டு தேர்தல்களை நடத்துவதற்கு அரசு தயாரா?

## ஐக்கிய தேசியக் கட்சி சவால்

கொழும்பு, ஓக.28

முடிந்தால் 17 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டு தென்மாகாணசபைத் தேர்தல் உட்பட இனிவரும் அனைத்துத் தேர்தல்களையும் நடத்திக் காட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு சவால் விடுத்துள் ளது.

அவ்வாறன நிலையின் கீழ் இடம்பெறும் தேர்தல்களில் அரசு வெற்றியடைந்தால் அந்த வெற்றியை ஐ.தே.கட்சி மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற் றிய அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் எம்.பியுமான கயந்த கரு ணாதிலகவே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வரு மாறு:-

மக்களின் அதிக ஆதரவினாலேயே அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிபெறுவதாக அரசு கூறிக்கொண்டு திரிகின்றது. அது பொய். மோசடி மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தித்தான் அரசு அத் தேர்தலில் வென்றது.

கிழக்கு மாகாணத் தேர்தல் முதல் ஊவா மாகாணத் தேர்தல் வரை இவ்வாறுதான் அரசு வெற்றிபெற்றது. அரசுக்கு மக்கள் செல்வாக்கு இருப்பது உண்மையென்றால் 17 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டு தென்மாகாணசபைத் தேர்தல் உட்பட அனைத்துத் தேர்தல்களையும் நடத்துமாறு நாம் அரசுக்கு சவால் விடுக்கின்றோம்.

17 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் பொலிஸ், தேர்தல், நீதி ஆணைக்குழுக்களை அமைத்துவிட்டு அதன்பிறகு இடம்பெறும் தேர்தல்களில் அரசு வெற்றிபெற்றால் அந்த வெற்றியை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வோம். (சி)

## சட்ட விரோதமாக இறைச்சி விற்பனை செய்தவர் மீது சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓகஸ்.28

குருநகர் பகுதியில் சட்ட விரோதமாக மாட்டிறைச்சி விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு உதவாத முறையில் இறைச்சியை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் குறிப்பிட்ட விற்பனையாளருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளளது.

குறிப்பிட்ட கடை உரிமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 10ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும், 2ஆயிரம் ரூபா அரச செலவுமாக அறவிடப்பட்டதுடன் நீதிவான் அவரை எச்சரித்தும் விடுதலை செய்தார். (203- 204)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பையா சுபேந்திரன் (செல்வா)
திதி: நவமி வளர்பிறை
மலர்வு:02✱03✱1973
உதிர்வு:24✱08✱2004

செல்வா செல்வா எனச் செல்லமாய் உனை அழைத்தோம்
சொல்லாமற் கொள்ளாமற் சிவனடி போய்ச் சேர்ந்தாயோ
ஆண்டுகள் ஐந்தானாலும் ஆறவில்லை எங்கள் மனம்
அழுது துடிக்கின்றோம் உன் அழகு முகம் காண்பதற்கு

''மிஷாந்தமஹால்'',
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர். (88246)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி நாகேந்திரம் சின்னம்மா

பாசமுடன் பரிவும் காட்டிய
பண்பின் சிகரமே!
நேசத்துடன் வாழ்ந்து மறைந்து விட்டீர்கள்
உங்கள் பிரிவைத் தாங்காமல் நாம்
துவண்டு கலங்கிப் போனோமே.

ஞானபாஸ்கரோதய சங்க வீதி,
கல்வியங்காடு. (88241)
என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பர் (வேதநாயகம்)



குருநகர் சென்.செபஸ்ரியன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பர் நேற்று (27.08.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - பிரகாசி தம்பதியரின் அருமை மருமகனும் றீற்றாவின் (தங்கம்) அன்புக் கணவரும் ஜோய் (கனடா), றோய் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாமா (கனடா), பவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜொய்சன், கார்லியூஸ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (29.08.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.செபஸ்ரியன் வீதி, குருநகர். (88239) தகவல்: மனைவி.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் மூன்று மாதகாலத்தில் சரளமாக ஆங்கிலம் கதைக்கப்பயில By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip/Cer in ENGLISH AND SCIENCE (M.L.S) (LONDON) 426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி சந்தி சங்கானை.
(88244) "THE ROYAL IS THE BEST"

## தேவை

யாழ்.பிரதான வீதியிலுள்ள பிலிப்ஸ் நேர்ஸிங் ஹோமில் (Philips Nursing Home) மிக நவீன வசதிகளுடன் கூடிய
I சத்திர சிகிச்சைக் கூடம்
II வார்ட்டுகள் (நோயாளர் விடுதி)
III வெளிநோயாளர் பிரிவு
என்பவற்றில் பணியாற்றுவதற்கு பின்வரும் ஆள்கள் தேவை
I பயிற்றுவிக்கப்பட்ட தாதியர்
II வரவேற்பாளர் (கணனி தட்டெழுத்து அனுபவமுள்ளவர்)
III தாதியர் சேவை பயிற்சிநெறியில் சேர்ந்து பழக விரும்பும்புபவர் (பயிற்சி நெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்)
நேர்முகத் தேர்வு 30.08.2009 (ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு Philips Nursing home, இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சிறைச்சாலை முன்பாக) இடம்பெறும். தொ.பே.இல. 021 222 4172 (88242)

## தேவை

போட்டோக்கொப்பி மற்றும் கணனித் தட்டச்சு வேலை தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. நேரில் மாலை 3 -5 மணி வரை. மதுரம் இன்ஸ்ரிரியூட், டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.தொ.பே.:077 9122918

## விற்பனைக்கு

CD 125 BENLY மோட்டார் சைக்கிள் (First owner) விற்பனைக்குண்டு. நெல்லியடி ... தொடர்பு கொள்ளவும்.
தொ.பே. 077 6509997 (88142)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



திருமதி பத்மாவதி கணேசன்
(கிச்சி - காரைநகர்)
தோற்றம்
25✱12✱1927
மறைவு
27✱07✱2009

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் வசித்தவரும் தற்பொழுது கனடாவில் வாழ்ந்து வந்தவருமான திருமதி பத்மாவதி கணேசன் 27.07.2009 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முதலியார் திருச்சிற்றம்பலம் (பிரதம சிறாப்பர், இலங்கை திறைசேரி, முதற் பிரதம சிறாப்பர், இலங்கை மத்திய வங்கி (Ceylon Central Bank) நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தேர்க்கார கந்தையா (பிரபல வர்த்தகர் கொச்சிக்கடை) - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் சி.க.கணேசனின் (முன்னாள் உரிமையாளர் கணேசன் பேக்கரி, கொட்டறாமுலை கணேசன் தோட்டம்) அன்பு மனைவியும் சுலோஜனா, றஞ்சனா, காஞ்சனா, ஜமுனா ஆகியோரின் பாசமிகு தாயும் வசந்தகுமார், றவிகாந்தராஜா, கனகராஜா ஆகியோரின் அன்பு மாமியும் நிஷாந், கிறிஷா, றிஷி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், வேலாயுதம், வள்ளியம்மை, விக்கினேஸ்வரன், மகேஸ்வரன் மற்றும் கமலாதேவி (கங்கா, கொழும்பு) ஆகியோரின் உடன்பிறப்புமாவார்.

எங்கள் குல விளக்கின் மறைவு அறிந்து உடன் எமது வாரிவளவு வீட்டிற்கு வந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொடர்பு சாதனங்கள் மூலம் தொடர்பு கொண்டு தங்கள் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

204, Cossack Court,
Mississauga L5B 4C3,
Ont. Canada. Phone: 905 615 8327
தகவல்: குடும்பத்தினர்
தேர்க்காரன் வீடு,
வாரிவளவு, காரைநகர். (88240)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் இன்றிரவு மின்னொளியில் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம்

கெருடாவில்,ஓக.28

நெல்லியடி, குஞ்சர்கடையடி மைதானத்தில் செலிங்கோ அனுசரணையுடன் வடமராட்சி 3ஆவது படையணி சிங்க றெஜிமன்ட் நடத்திவரும் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று இரவு மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இரண்டு பிரபல இசைக்குழுவின் இன்னிசை கானமும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

பருத்தித்துறை - ஐக்கிய வி. கழகமும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் இறுதியாட்டத்தின்போது மோதவுள்ளன.

இந்நிகழ்வுக்கு யாழ்.அரச அதிபர், வடமராட்சி உதவி அ.அதிபர்கள் மற்றும் வடமாகாண பிரிகேடியர், வங்கி முகவர்கள், வெளிநாட்டு நிறுவனங்களில் பிரமுகர்கள், செலிங்கோவின் தலைமையக வடபிராந்திய விற்பனை அபிவிருத்தி முகாமையாளரும் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (1-70-253)

# வில்சன் அணியை வென்று சம்பியனானது வளர்மதி

யாழ்ப்பாணம்,ஓக.28

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையம் 44ஆவது ஆண்டுப் பூர்த்தியையொட்டி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்திய சுற்றுப்போட்டியில் வளர்மதி வி.க. கிரிக்கெட் அணி சம்பியனாகியது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மட்டுவில் தெற்கு வளர்மதி வி.க. அணியும் மட்டுவில் வில்சன் வி.க. அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி வி.க. அணியினர் 170 ஓட்டங்களைப் பெற்றனர். பின்னர் துடுப்பெடுத்தாடிய வில்சன் வி.க. அணியினர் 110 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

# மாவட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் காங்கேசன் ஐ.விகவுக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவானது.

புத்தூர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டபோதிலும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மிகவும் சுலபமாக வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை முறையே 25:14, 25:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (1-86)




# பாடசாலைகள் 13 வயதுப்பிரிவு ஆட்டம்; யூனியனை இன்னிங்ஸால் வென்றது ஸ்கந்தா

வலி.வடக்கு,ஓக.28

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திவரும் 13 வயதுப் பிரிவினருக்கான இன்னிங்ஸ் போட்டி ஆட்டமொன்றில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் வெற்றிபெற்றுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 27.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அனிஸ்டன் 10, கிருசியன், கிசோர் தலா 8 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த சுவிற்ரன் 5.4 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கார்த்திபன் 9 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சரத்குமார் 4 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 2 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கிரிசாந் 2 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் ஓர் ஓட்டத்திற்கு 2 விக்கெட்டுகளையும், ஐங்கரன் 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 55.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஐங்கரன் ஆட்டமிழக்காது 33, சுவிற்ரன் 15, கிரிசாந் 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 42 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரியைச் சேர்ந்த லனுசன் 9 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கிசோர் 7.5 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், அனோஜன் 9 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கிரிசியன், மேவின் முறையே 5, 18 ஓட்டங்களைக் கொடுத்துத் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியதுடன் யதுர்சன் 2 ஓவர்கள் பந்துவீசி ஓட்டம் எதனையும் கொடுக்காது ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 30 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

கிசோர் 13, கோபிநாத் 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த் கார்த்திபன் 12 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், சுவிற்ரன் 7 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், த்னிஸ்டன், கிரிசாந்த் முறையே 4,17 ஓட்டங்களைக் கொடுத்துத் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## இலங்கை கிரிக்கெட் சபையின் அனுசரணையுடன்

# திருகோணமலையில் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி; யாழ்.மாவட்டத்தில் இருந்து செல்லும் அணி தெரிவு

யாழ்ப்பாணம்,ஓக.28

இலங்கைக் கிரிக்கெட் சபையின் அனுசரணையுடன் வருடந்தோறும் வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 6ஆம் திகதிவரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ளுவதற்கு 15 பேரைக் கொண்ட 17 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணி யாழ்.மாவட்டத்திலிருந்து செல்லவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட அணியின் விவரம் வருமாறு:

விவேகனந்தராஜா ஹரிவதனன் (தலைவர்) - சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம், ரட்ணம் எட்வட் எடின் (உபதலைவர்) - யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம், ஞானசீலன் ஜெரிக்துசன் - யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம், தங்கராசா கோகுலன் - யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம், பாக்கியநாதன் சிறிகுகன் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, குருபரசோதிநாதன் பிரசோபனன் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, சிவசண்முகநாதன் சீராளன் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை,

சகாயராஜா ஜோன்சன் சஞ்ஜீவ்ராஜ் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம், ஜூலியன் பற்றிக் எரிக் பிரதாப் - சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம், அந்தோனிராஜா கவாஸ்கர் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம், குலவீரசிங்கம் ஜனுதாஸ் - கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில், கமலஜோகேஸ்வரன் ராகுலன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில், யோகநாதன் கபில்ராஜ் - ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை, சத்தியமூர்த்தி சஞ்ஜீவன் - சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம், சிங்கராஜா டக்ஸன் - சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். (203)

# வவுனியா ம.வி. அணி வந்து சேராததால் மகாஜனவுடனான ஆட்டம் தடைப்பட்டது

வலி.வடக்கு,ஓக.28

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் மாவட்ட மட்டப் போட்டிகளில் 15வயதுப் பிரிவினருக்கான ஆட்டமொன்று போக்குவரத்துக் காரணங்களால் தடைப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் வவுனியா மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த ஆட்டம் உரிய அணி யாழ்ப்பாணம் வராமையினால் தடைப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து குறிப்பிட்ட பாடசாலை அணி ஏ9 பாதை ஊடாக யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் உரிய அனுமதி கிடைக்காததால், குறிப்பிட்ட அணி பயணம் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஏ9 பாதை ஊடாக குறிப்பிட்ட சுற்றுப்போட்டியில் விளையாட வேண்டிய கொறவப்பொத்தனை பாடசாலை அணி ஏ9 வீதி ஊடாக யாழ்.குடாநாட்டிற்கு வந்து விளையாடியுள்ளது.

மற்றுமொரு போட்டியில் அனுராதபுரம் பாடசாலை யாழ்ப்பாணத்திற்கு வந்து விளையாடித் திரும்பியுள்ளது.

இந்நிலையில் வவுனியா ம்த்திய மகா வித்தியாலய அணியின் பயணம் தடைப்பட்டுள்ளது. இப்போட்டி மீண்டும் எப்போ? எங்கு? நடைபெறும் என்பது தெரியாத நிலைமை காணப்படுகின்றது எனக் கூறப்பட்டது. (1-86)



வல்லை மகளிர் வித்தியாலயத்தில் தும்பளை [illegible] யோகாசனக் கண்காட்சி நடத்தப்பட்டது.
மாணவர்கள் பயிற்சி பெறுவதனையும் அதிபர் [illegible] வழங்குவதனையும் படங்களில் காணலாம்.
பயிற்சி ஆசிரியர் ரி.தேவராஜேந்திரன், பயிற்றுநர்கள் ரி.சிறிகாந், ரி.அன்ரன் புஸ்பதாஸ் ஆகியோரை முதலாவது படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 'வேள்ட்விசன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச செயலகத்தினால் திடற்புலம் கிராமத்தில் நடத்தப் பட்ட கருத்தரங்கின் நிறைவில் சிறப்புவிருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் திருமதி வி.சத்தியகுமார் மரக்கன்று ஒன்றை நடுவதையும், 'வேள்ட்விசன்' நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் த.மொ.வசந்தநாயகம் திடப்புலம் ஒளிநிலா சனசமூக நிலையத் தலைவரிடம் மரக்கன்று ஒன்றைக் கைளிப்பதையும் கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதேச மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: கலைஞன்)

# முகாம்களிலுள்ள அகதிகளை நடத்தும் விதம் தொடர்பாக இலங்கைக்கு ஆஸி. அழுத்தம் கொடுக்க வேண்டும்

## அந்த நாட்டின் கத்தோலிக்க அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஓக. 28

இலங்கையின் அகதி முகாம்களில் உள்ள 3 லட்சம் மக்கள் நடத்தப்படும் விதம் குறித்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு அவுஸ்திரேலிய அரசை கோரி மனுக்களை அனுப்பும் பிரசாரமொன்றை அந்த நாட்டின் கத்தோலிக்க நீதி மற்றும் சமாதானத்திற்கான ஆணைக்குழுவின் தலைமையகம் முன்னெடுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்டேர்ஸ் நகரிலுள்ள சகல தேவாலயங்களுக்கும் குறிப்பிட்ட மனுவை அனுப்பியுள்ள அந்த அமைப்பு செப்டெம்பரில் 18 ஆம் திகதிக்கு முன்னர் அதில் கையெழுத்திட்டு தமக்குத் திருப்பி அனுப்புமாறு கோரியுள்ளதுடன், இதனை அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

முகாம்களுக்கு செல்வதற்கு மனிதாபிமான அமைப்புகள், பத்திரிகையாளர்கள், இராஜதந்திரிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளுக்கு அனுமதி வழங்குமாறு இலங்கை அரசை அவுஸ்திரேலியா கோரவேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழர்கள் முகாம்களிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மோதல்களின்போது இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்றும் அந்த அமைப்பு அவுஸ்திரேலிய அரசை கோரியுள்ளது.

தமிழ் மக்களின் துயரங்களுக்குத் தீர்வு காண்பதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை காணும் நடைமுறையை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலைமை புறக்கணிக்காமலிருப்பது முக்கியமானது எனக் குறிப்பிட்டுள்ள கத்தோலிக்க நீதி மற்றும் சமாதானத்திற்கான ஆணைக்குழுவின் நிறைவேற்று அதிகாரி பீட்டர் ஆர்ன்ட், முகாமிலுள்ள மக்களின் நிலை குறித்து பகிரங்கமாக எவரும் குரல் கொடுக்காததால் அவுஸ்திரேலிய அரசு தமிழ் மக்களின் நிலை குறித்து கவலையடைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மோதல் முடிவடைந்து மூன்று மாதங்களான பின்னரும் எவரும் விடுவிக்கப்பட்டமைக்கான அறிகுறிகள் இல்லை. இலங்கை அரசு பொதுமக்களை தடுத்து வைத்திருப்பதற்கு ஏன் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.(சி)

# 'தீந்தேன்' சிறுவர் பாடல்கள் நூல், இறுவட்டு வெளியீடு

கொழும்பு, ஓக.28

பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் எழுதிய ''தீந்தேன்'' சிறுவர் பாடல்கள் நூல் மற்றும் இறுவட்டு வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை5மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தெல்லிப்பழை கலை, இலக்கியக் களத்தலைவர், சைவப் புலவர் சு.செல்லத்துரை தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது.

''தீந்தேன்'' சிறுவர் பாடல்கள் நூல் மற்றும் இறுவட்டு ஆகியவற்றை முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதம் வெளியிட்டு வைப்பதுடன் வெளியீட்டுரையையும் நிகழ்த்த வுள்ளார். நூல் நயப்புரையை தெல்லிப்பழை கலை, இலக்கியக்களச் செயலாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் சப்ரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனும் இறு வட்டு நயப்புரையை கலாபூஷணம் எம்.எஸ் ஸ்ரீதயாளனும் நிகழ்த்தவுள்ளனர்.

(203- 201)

## எமது இனிய குடும்பத் தலைவியை இன்றைய 31 ஆம் நாளில் நினைந்து...



திருமதி டெய்சிராணி இராஜேஸ்வரன்

**தோற்றம்: 06.03.1962 மறைவு: 29.07.2009**

*தீபமாய் ஒளியைத் தந்து திரியெனக்கருகித்தீய்ந்த....*
*பேரொளிச் சுடரே தேவி பெற்ற எம் வாழ்வில் உம்மால்....*
*நாதனோடான் நான்கு நயப்புறு பிள்ளைச் செல்வம்....*
*வாழ்வினில் பெற்ற இன்பம் வாய்மொழித் தேனாம் ஊற்று.....*
*ஆறிடும் நிழலின் தேடல் அருகிருந்தணைக்கும் வேட்கை.....*
*பாசமாம் சொல்லின் உண்மை பாலகர் கொஞ்சும் செல்லம்...*
*ஆகநாம் பெற்ற செல்வம் அம்மையே உனது தோற்றம்.....*
*போதுமே அது என்றாக போயெமைத் தவிக்கவிட்டு....*
*மாதமோ ஒன்றாச்சாக மறந்திடா நிலவாய்க் கண்ணில்....*
*தோணுதே அம்மாதேவி துடிப்பதை அறிவாயோ நீ.....?*
*அம்மையே முருகன் தாளில் அமர்ந்து நீ நிறைவுகாண....*
*மீதமாய் உள்ள நாங்கள் மிக இறைதாளை வேண்டி....*
*தாழுறோம் அம்மா சென்னி தாய்மையே அமைதிகொள்வாய்...*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

### நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவி தாயாள் திருமதி டெய்சிராணி இராஜேஸ்வரன் உடல் நலமின்றி நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவிலும் பொது வைத்தியப் பிரிவிலும் 73 நாள்களாக அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவரை மீட்டெடுத்து தரவேண்டும் என்று அயராது உழைத்த மருத்துவத் தெய்வங்களுக்கும் அவர்தம் உதவி மருத்துவ தாதிமார்களுக்கும் அவர்களது பெரு முயற்சி பலனளிக்காவிடினும் அதனால் அவர்கள் பட்ட துன்பத்தினை நினைவு கூர்ந்து இன்றைய 31 ஆம் நாளில் எமது நன்றியினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் இறுதிக்கிரியை முதலான அனைத்துக் கடமைகளின் போதும் உடனிருந்து உதவிகள் பல்புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வே.இராஜேஸ்வரன் (கணவர்),
சாமினி, சாளினி, சாரங்கா,
பிரசாந்தி (பிள்ளைகள்).

இல.16, கல்லூரி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 9,900 ஹெக்டெயர் பிரதேசத்தில் நெற்செய்கை; அதற்கு வசதியாக முழுநிலத்தையும் மக்களிடம் விரைவில் கையளிப்போம்

## மறவன்புலோ ஏர்பூட்டு நிகழ்வில் பஸில் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக.28

யாழ்.மாவட்டத்தில் 9,900 ஹெக்டெயர் நிலப் பரப்பில் நெற்செய்கை செய்ய வசதி உண்டு. அந்த நிலப்பரப்பு முழுவதிலும் செய்கை செய்யக்கூடிய ஏற்பாட்டைச் செய்ய விருக்கின்றோம்.

அந்த நிலப்பரப்பில் இதுவரை விடுவிக்கப்பட்ட பிரதேசம் போக, எஞ்சிய பிரதேசத்தையும் விடுவித்து அங்கும் வயல் விழா நடத்தி அவற்றையும் மக்களிடம் விரைவில் கையளிப்போம்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி தெற்கு மறவன்புலோப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஏர்பூட்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பேசுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாள் இந்த மாவட்ட மக்களின் முக்கியமான நாளாகும். நீங்கள் உங்கள் வயல் நிலத்தில் பயிர்செய்ய ஆரம்பித்த நாளாகும். எமது படையினர் இந்த நல்ல நிலையை ஏற்படுத்தி தந்துள்ளனர்.9 வருடங்களின் பின்னர் இன்று யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் மனிதாபிமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆரம்பப்பணிகள் மாவிலாறுப் பகுதியில் தொடக்கப்பட்டன. காணிக்காரர்களுக்கு நிலங்களை கையளிக்கும் நிகழ்வாக இதனைக் கருதுகிறோம் -

இன்று ஒரு சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் எல்லோரும் நன்றி செலுத்த வேண்டியவர்கள். இந்த யுத்தத்தில் தங்கள் உயிரைத் தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கும் ஏனைய வீரர்களுக்குமாகும்.

இந்தப் பிரதேசத்தில் மேலும் நிலங்களை விடுவிக்க உள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் 9,900 ஹெக்டேயர் நெற்செய்கைக் காணிகள் இருக்கின்றன. இவற்றில் விவசாயம் செய்ய நடவடிக்கை எடுப்போம்.

யாழ்.மாவட்டத்திலிருந்து முந்திரிகை, வெங்காயம் உள்ளிட்ட பொருள்களை தென்பகுதிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றை இயன்ற அளவு அனுப்ப முயற்சிக்க வேண்டும். இது எமக்கு கிட்டவேண்டும்.அவற்றை சாப்பிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும். முற்றுமுழுதாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். உங்கள் முயற்சிகள் வெற்றி அளிக்கவேண்டும் - என்றார்.

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

சமூகநலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உரை நிகழ்த்துகை யில்:-

படிப்படியாக நீங்கள் உங்கள் பிரதேசங்களை அடையலாம். அது இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அப்போதைய தலைவர்கள் சரியாக பயன்படுத்தவில்லை.

ஜனாதிபதியுடன் பல விடயங்களை கலந்துரையாடியுள்ளேன். ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவும் மக்களின் முன்னேற்றத்துக்காக உழைப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார். நடைமுறையிலும் பல விடயங்களை தந்திருக்கிறார்.

இதில் எமது கடமை கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியான விதத்தில் பயன்படுத்த வேண்டும். 20வருடங்களில் விரும்பியோ விரும்பாமலோ மௌனமாக அடங்கி இருந்துவிட்டோம். உயிர் வாழும் மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எதற்கும் தயங்க வேண்டிய அவசியம் இல்லை. நியாயமான வகையில் தேசிய நலன்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கருத்துக்கள் செயற்பாடுகள் உத்தரவாதப் படுத்தப்படும். இந்த நம்பிக்கையுடன் இதனை இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும்- என்றார்.

### அரச அதிபர்

அரச அதிபர் உரை நிகழ்த்துகையில் - இப்பகுதியில் உள்ள வயல் நிலங்களில் மக்கள் நெற்செய்கையை மேற்கொள்ள வேண்டும். சமூகநலத்துறை அமைச்சின் வழிகாட்டலின் பெயரில் யாழ்.மாவட்டத்தில் எல்லா வயல் நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு எமது பிர தேசத்தை வளப்படுத்த வேண்டும் -என்றார். (1-131)

# நூலகம், கணனிப்பயிற்சி நிலையம் காரைநகரில் நாளை திறக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக 28

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கணபதிஸ்வரக் குருக்கள் நூலகம், கணனிப் பயிற்சி நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு இடம்பெற உள்ளது.

வியாவில் ஐயனார் ஆலய அறங்காவலர் க. சோமசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் நூல்நிலையத்தையும் கணனிப் பயிற்சி நிலையத்தையும் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக் குருக்கள் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டி திறந்து வைக்க உள்ளார்.

நிலையத்தின் பெயர்பலகையை லண்டனில் இருந்து வருகை தந்துள்ள இராசநாயகம் சுந்தர்ராயன் திரைநீக்கம் செய்து வைக்க உள்ளார்.

கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்களின் தந்தையாரான கணபதிஸ்வரக் குருக்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள இந்த நூல் நிலையத்திற்கு வைத்தீசுவரக் குருக்கள் தனது வாழ்நாளில் சேகரித்த கிடைத்தற்கரிய 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமய, சமூக அறிவியல் நூல்களை வழங்யுள்ளார். (1-250)

# வடமாகண விளையாட்டுப் போட்டிக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 28

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள 2009 ஆம் ஆண்டுக்கான வடமாகாண விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துறையாடலில் பிரதேச செயலர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர் மற்றும் வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, சென்.சாள்ஸ் ம.வி., சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் சென். ஜோன்ஸ் முதலுதவிப் படையணி, செஞ்சிலுவைச்சங்கம், யாழ். மாநாகர சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அரசாங்க அதிபர் கே. கணேஸ் கேட்டுள்ளார். (06)

# சோமாலியாவில் அரைவாசிப்பேர் பட்டினியால் தவிக்கும் அபாயம்

## ஐ.நா. அறிக்கை மூலம் எச்சரிக்கை

நியூயோர்க், ஒக. 28

ஆபிரிக்க நாடான சோமாலியாவின் மொத்த மக்கள் தொகையில் அரைபங்குக்கு மேற்பட்டோர் இந்த ஆண்டு பசி, பட்டி னியின் பிடியில் சிக்கித் தவிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது.

அவர்களுக்கு உணவுப் பொருள் கிடைப்பதற்கு விரைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், இன்னும் நிலைமை மோசமடையும் என்றும் ஐ.நாவின் உணவு உத்தரவாத மற்றும் ஊட்டச் சத்து ஆய்வு பிரிவு (எவ்.எஸ்.என்.ஏ.யூ.) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இப்பிரிவு சமீபத்தில் ஆய்வு நடத்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் இத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சோமாலியாவில் இந்த ஆண்டு மிகவும் குறைவான அளவில் மழை பெய்துள்ளது. இதனால் நாட்டின் தெற்குப் பகுதியிலும், மத்திய பகுதியிலும் கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால் உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

30 இலட்சம் பேர் முழுமையாக நிவாரணப் பொருள்களையே நம்பியுள்ளனர். சோமாலியாவுக்கு பிற நாடுகள் உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றன. எனினும், இவற்றின் மூலம் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய இயலவில்லை.

சத்தான உணவு கிடைக்காததால் குழந்தைகளும், கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சோமாலியாவில் 5 வயதுக்குக் குறைவான 3 இலட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 70 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைவால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் போதுமான சிறப்பு மருத்துவர்களும் இல்லை. இதனால் குழந்தைகள் இறப்பு அதிகரிக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

# இந்தோனேஷியாவில் மீண்டும் நிலநடுக்கம்

ஜகர்த்தா, ஒக. 28

கிழக்கு இந்தோனேஷியாவில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோளில் இது 5.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

நேற்று அதிகாலை உள்ளூர் நேரப்படி சுமார் 4.57 மணிக்கு கிழக்கு இந்தோனேஷியூாவில் உள்ள கொரன்டாலோ மாகாணத்தில் மிதமான இந்நிலநடுக்கம் ஏற்பட்டது. இது அந்த மாகாணத்திலிருந்து 87 கி.மீ. தென்கிழக்கே சுமார் 95 கி.மீ. ஆழத்தில் மையங் கொண்டிருந்தது.

சேத விவரங்கள் உடனடியாக வெளியாக வில்லை என அந்நாட்டின் பூகோள ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

# பக்தாத் குண்டுவெடிப்புகள்: அல்-குவைதா பொறுப்பேற்பு

பாக்தாத், ஒக. 28

பாக்தாத்தில் கடந்த வாரம் நிகழ்ந்த தொடர் குண்டுவெடிப்புகளுக்கு அல் குவைதா இயக்கத்தின் ஈராக் பிரிவு பொறுப்பேற்றுள்ளது.

பாக்தாத்தின் பல இடங்களில் கடந்த வாரம் நிகழ்ந்த குண்டுவெடிப்புகளில் 87 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்த குண்டுவெடிப்புகளுக்கு மூளையாக இருந்து, பின்னணியிலிருந்து செயற்பட்ட அலி காதிம் இப்ராகிம் என்பவர் கைது செய்து செய்யப்பட்டு விட்டார் என ஈராக் பாதுகாப்புப் படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தாங்கள்தான் இந்த குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியவர்கள் என அல்-குவைதா இயக்கத்தின் ஈராக் பிரிவான ''ஈராக் இஸ்லாமிய நாடு'' என்ற அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

கடவுள் அருளால் அவரது புதல்வர்கள், பாக்தாத்தில் புதிய ஆசீர்வதிக்கப்பட்ட தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள் என அந்த இயக்கத்தின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ.டிஸ்கவரி விண்கலப் பயணம் இறுதியில் மீண்டும் ஒத்திவைப்பு

கேப் கனவரால், ஒக. 28

அமெரிக்க டிஸ்கவரி விண்கலம் ஏழு விண்வெளி வீரர்களுடன் திட்டமிட்டபடி புதன்கிழமை காலை விண்வெளிக்கு அனுப்பப்படவில்லை. இறுதி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கோளாறு காரணமாக, இதன் பயணம் ஒத்தி வைக்கப்பட்டது. இப்படி ஒத்திவைக்கப்படுவது இது இரண்டாவது முறையாகும்.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, 13 நாடுகளுடன் சேர்ந்து விண்வெளியில் ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து வருகிறது. இதற்குத் தேவையான பொருள்கள் அமெரிக்காவின் டிஸ்கவரி விண்கலம், ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் ஆகியவற்றின் மூலம் அடிக்கடி அனுப்பப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவின் டிஸ்கவரி விண்கலம், 7 விண்வெளி வீரர்களுடன் புதன்கிழமை காலை விண்ணில் செலுத்தப்படவிருந்தது. அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டன. இந்நிலையில், விண்கலத்திலுள்ள எரிபொருள் தாங்கியில் வால்வு ஒன்றில் கோளாறு ஏற்பட்டிருந்தமை இறுதி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால், விண்கலம் விண்வெளியில் செலுத்துவது ஒத்தி வைக்கப்பட்டது. இப்படித் தள்ளி வைக்கப்படுவது இது 2 ஆவது முறையாகும். ஏற்கனவே இந்த விண்கலம் முதல் நாளான செவ்வாய்க்கிழமை விண்ணில் செலுத்தப்படவிருந்தது. அப்போது வானிலை மோசமாக இருந்ததால் முதல் முறை ஒத்திவைக்கப்பட்டது.

இன்று வெள்ளிக்கிழமை இந்த விண்கலம் மீண்டும் விண்ணில் செலுத்தப் படுமென நாசா வட்டாரம் தெரிவித்துள்ளது.

# தண்டனை விதிக்கப்படும் கைதிகளிடமிருந்து உடல் உறுப்புகளை எடுப்பதை நிறுத்த சீனா முயற்சி

பீஜிங், ஒக. 28

மாற்றீடு செய்ய தேவையான உறுப்புகளை பெறுவதற்கான முக்கிய வழியாக இருந்த தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை பயன்படுத்துவதை நிறுத்த சீனா முயற்சிக்கின்றது.

சீனாவில் உறுப்புகளின் மாற்றுச் சிகிச்சைக்காக அவற்றை வழங்கும் கொடையாளிகளில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பேர் தண்டிக்கப்பட்ட கைதிகளாக உள்ளார்கள் என சீன அதிகாரபூர்வ ஊடகம் ஒன்றின் தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறான உறுப்புகளை கொடையாக வழங்குவதை ஊக்குவிப்பதற்கான தேசிய தொண்டர் திட்டம் ஒன்றை சீன அரசு ஆரம்பிக்கின்றது. அது மாற்றீட்டு சிகிச்சைகளுக்காக அவயவங்கள் சட்டத்துக்குப் புறம்பாக கடத்தப்படுவதைத் தடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், இறந்த பின்னர் உடலிலிருந்து அவயவங்களை அகற்றுவது தொடர்பாக சீனாவில் இருக்கும் கலாசார ரீதியிலான மனத்தடை இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதை சிரமமாக்கும் என்றும், 2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை நோயாளிகளிலிருந்து 130 பேர் மாத்திரமே தமது உறுப்புகளை தானம் செய்துள்ளனர் என்றும் செய்தியாளர்கள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்வேலிக்குள் உள்ள தமிழரை விடுவிக்கக் கோரி தமிழகத்தில் 'தமிழ்த் தேசிய எழுச்சிநாள்' பேரணி




சென்னை, ஒக. 28

ஈழத்தில் முள்வேலிகளுக்குள் வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்து அவர்களது சொந்த வாழ்விடங்களுக்கு அனுப்ப வேண்டும், தமிழகத்தை ஆக்கிரமிக்கும் வெளியாரை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழகமெங்கும், நேற்று முன்தினம் புதன்கிழமை தமிழ்த் தேசிய எழுச்சி நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பேரணி, ஆர்ப்பாட்டம் என போராட்டங்கள் நடந்தன. கடந்த யூலை மாதம் திருச்சியில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் நடத்தப்பட்ட தமிழ்த்தேசியம் சிறப்பு மாநாட்டில், ஒகஸ்ட் 26 ஆம் திகதி தமிழ்நாட்டுத் தமிழர்கள் தமிழ்த் தேசிய எழுச்சி நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

தமிழகம், தான் இழந்த உரிமைகளை மீட்கவும், ஈழ விடுதலைக்குத் துணை நிற்கவும் உறுதி ஏற்றுக் கொள்ளும் நாளாக இந்நாள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென அத்தீர்மானத்தில் வலியுறுத்தியிருந்தது. அதன்படி நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் தமிழகமெங்கும் கடைப்பிடிக்கப்பட்டது.

தஞ்சையில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றன.

கட்சியின் பொதுச் செயலாளர் பெ.மணியரசன் எழுச்சிமிகு நிறைவுரையாற்றினார். தமிழ்நாட்டு உரிமைகளை மீட்க வேண்டியதின் அவசியம் குறித்தும், முள்வேலிகளுக்குள் சிறை வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை விடுதலை செய்யக் கோரியும் பெ.மணியரசன் கருத்துரை வழங்கினார்.

சென்னை 'னைவரங்கத்தில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் மாலை 4 மணியளவில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழகத்தில் வெளியாரை வெளியேற்று! முகாமிலுள்ள தமிழர்களை விடுதலை செய்! என்பன போன்ற பல்வேறு முழக்கங்கள் ஆர்ப்பாட்டத்தின் போது எழுப்பப்பட்டன.

சிதம்பரம், ஈரோடு, மதுரை, ஒசூர், கோவை, புதுச்சேரி, சேலம், வேலூர் ஆகிய இடங்களிலும் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



விநாயகர் சதுர்த்தி விழா கடந்த 23ஆம் திகதி கொண்டாடப்பட்டது. நேற்றுமுன்தினம் பூஜை செய்த பின்னர் தூத்துக்குடி திரேஸ்புரம் கடலில் பெரிய விநாயகர் சிலையை கரைக்க பக்தர்கள் எடுத்துச் செல்கின்றபோது....

# வரும் கல்வியாண்டில் சமச்சீர் கல்வி அமுலாகிறது என்கிறார் கருணாநிதி

சென்னை, ஒக. 28

சமச்சீர் கல்வி முறை வரும் கல்வியாண்டில் (2010 - 2011) இருந்து அமுல்படுத்தப்படும் - என்று முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

வரும் கல்வியாண்டில் முதல் மற்றும் ஆறாம் வகுப்புகளில் சமச்சீர் கல்விக்கான பொதுப்பாடத் திட்டம், பாட நூல்களை உருவாக்கி செயற்படுத்த வேண்டும் என்றும் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

சமச்சீர் கல்வி முறையை செயற்படுத்துவதற்கான கூட்டம் சென்னையில் முதல்வர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு -

இப்போதுள்ள அனைத்து கல்வி வாரியங்களையும் ஒருங்கிணைத்து ஒரு பொது கல்வி வாரியத்தை உருவாக்க வேண்டும்.

வரும் கல்வியாண்டில் (2010 - 2011) முதல் வகுப்பிலும், ஆறாம் வகுப்பிலும் பொது பாடத் திட்டம், பாட நூல்கள் உருவாக்கி செயற்படுத்த வேண்டும். தொடர்ந்து, வரும் 2011 - 2012 ஆம் ஆண்டில் பிற வகுப்புகளுக்கும் பொதுப் பாடத் திட்டத்தையும், பாட நூல்களையும் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். பயிற்று மொழியாக தமிழுடன் இப்போது நடைமுறையில் உள்ள பிற மொழிகளும் தொடர வேண்டும் என்பன போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

# நான் இராவணனின் பரம ரசிகன்

## கமல்ஹாசன் பேச்சு



சென்னை ஒக. 28

நான் இராவணனின் ரசிகன் - என்று நடிகர் கமல்ஹாசன் கூறினார்.

நடிகை ஷோபனா நடத்திய மாயா ராவண் நாட்டிய நாடக நிகழ்ச்சியை ஷமாரோ என்ற நிறுவனம் குறுந்தகடாக வெளியிட்டுள்ளது. இதன் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்தது. விழாவில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நான் இராவணனின் பரம ரசிகன். அது ஏன் என்பது உங்களுக்குத் தெரியும். தமிழக மக்கள் கலா ரசிகர்கள். அவர்கள் ஹீரோவையும் ரசிப்பார்கள். ஆண்ட்டி ஹீரோவையும் ரசிப்பார்கள்.

இராவணன் காலத்திலிருந்தே எங்களுக்கு பெருமை பேசத் தெரியாது. எங்கள் பெருமையை மற்றவர்கள் பேசினால்தான் தெரியும்.

சிவாஜிக்குக் கிடைக்க வேண்டிய மரியாதை, கிடைக்கவில்லை என்று சொல்வேன். அந்த நிலை இப்போதும் தொடர்கிறது. ஆனால் அது மாறுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. வர்த்தகமும், கலையும் கலப்பது கடினம். இராவணனைப் போல மாயா நரகாசுரனையும் ஷோபனா கொண்டு வரவேண்டும். நடனம் எனக்கு போன ஜென்மம் போல இருக்கிறது. பயிற்சி இல்லாதவன் கலை பற்றி பேச அருகதையற்றவன். ஆனால் அதை மதிக்கின்ற பண்பு, பணிவு இருக்கின்றன - என்றார்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## செல்வி அமலின் குயிலினி மங்களதாஸ்



தோற்றம் 05.04.1986 மறைவு 29.07.2009

பேரிடி ஒன்று விழுந்ததம்மா
பேரதிர்ச்சி எம்மை சூழ்ந்ததம்மா
பேதைகள் நாம் எதிர்பாராத வேளையில்
பெருந்துன்ப வெள்ளம் மூடியதம்மா
பெரியப்பா மம்மி என்ற குரல்
பெருந்தூரத்தே கேட்குதம்மா
என்னுடன் வந்து வாழ ஏன் விரும்பினாய்
என் மனதை ஆட்கொள்ள ஏன் துணிந்தாய்
நீ விட்டுப் போன நினைவுகள் வந்து
நித்தம் வேதனையில் ஆட்டுதம்மா
குயிலம்மா உன் கலகலத்த
குரலோசை எந்நேரமும் கேட்குதே
கூடப் பிறந்தவள் யாருமின்றி
குயிலி நான் பிறந்தேனே
தேடியே என்னை தெரிந்து நீ
நேசமாய் வந்து சேர்ந்தாயே
சித்தி மகள் என்றாலும் நீ
சிநேகிதியாய் உடன்பிறப்பாய்
சிறந்த துணையாளியாய்
எங்கு சென்றாலும் என்னுடனே
என்ன செய்தாலும் என்னுடனே
எதனைச் சிந்தித்தாலும் என்னுடனே
என்றும் ஒன்றித்து வாழ்ந்தாயே குயிலி
சின்னச் சிட்டுக் குயிலே
இனி ஆறுதல் எமக்கு யாரம்மா
அகத்துணை எமக்கு யார் செல்வமே
நல்கிட முடியல்லையே உன் பிரிவு
கனவிலாவது கண்டிட
வருவாயா காத்திருக்கின்றோம்
ஒரு முறை கர்த்தர் பாதத்தில்
நிலைத்து கானம் பாடுவாய் கானக் குயிலே

பிரிவால் துயருறும்:
பெரியப்பா, மம்மி,
டெஸ்மன் அண்ணா, பபிதாக்கா.

5, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

# இனவெறிக் கும்பல் போன்ற செயற்பாடு: பா.ஜ.க. மீது ஜஸ்வந்த்சிங் கடும் தாக்கு



பா.ஜ.கவில் இருந்து சமீபத்தில் நீக்கம் செய்யப்பட்ட ஜஸ்வந்த் சிங், அந்தக் கட்சியை அமெரிக்காவில் வெள்ளை இனவெறிக் கும்பலோடு ஒப்பிட்டு விமர்சித்துள்ளார். அத்வானியைச் சுற்றி ஒரு குறிப்பிட்ட கும்பல் சூழ்ந்திருக்கிறது எனவும் தெரிவித்தார்.

ஜின்னாவைப் புகழ்ந்து ஜஸ்வந்த் சிங் அண்மையில் புத்தகம் எழுதி இருந்தார். இதையடுத்து, பா.ஜ.கவிலிருந்து கடந்த வாரம் நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

பா.ஜ.கட்சியில் இருந்து மரியாதையற்ற முறையில் நீக்கப்பட்டமை குறித்து என்னிடம் கேட்க வேண்டாம். ஆலோசகர்கள் அல்லது சிந்தனையாளர்கள் என்ற மாய வட்டத்துக்கு வெளியே நான் இருக்கிறேன். ஏனெனில், ஆர்.எஸ்.எஸ்ஸில் இருந்து நான் வரவில்லை. ஓர் அரசியல் கட்சிக்கு எதற்காக அங்கிருந்து வர வேண்டும்?

அத்வானியுடன் 30 ஆண்டுகளாக உடன் இருந்து வருகிறேன். பிரதமர் பதவிக்கு அத்வானியை மக்கள் நிராகரித்து விட்டார்களா என்ற கேள்விக்கோ, அவருடைய குணாதிசயம், அரசியல் மற்றும் தனிப்பட்ட முறையில் நான் கருத்துக் கூறுவது அதிக பிரசங்கித் தனமானதாக இருக்கும். சொந்த லாபத்துக்காக செயற்படும் ஒரு கும்பல், அத்வானியை இயக்கி வருகிறது.

ஒரு சுயேச்சையாக மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். சமாஜ்வாடி உட்பட எந்தக் கட்சியிலும் சேரப்போவது இல்லை - என்றார்.

# பன்றிக்காய்ச்சல் பலி 83 ஆக உயர்வு

இந்தியா முழுவதும் வேகமாகப் பரவிவரும் பன்றிக்காய்ச்சலுக்கு பலியானோரின் எண்ணிக்கை 83 ஆக உயர்ந்துள்ளது.

மராட்டிய மாநிலம் புனே நகரில், பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு ஷபானா ஷேக் சந்தீப் கெய்க்வாட் ஆகியோர் நேற்றுமுன்தினம் பலியாகினர். இதேபோல், பெங்களூரில் நாகராஜ், வெங்கடேஷ், பி.முனிரத்தினம், புஷ்பலதா பத்தீஷ் ஆகியோர் நேற்றுமுன்தினம் பலியாகினர்.

இதையடுத்து இந்தியா முழுவதும் பன்றிக் காய்ச்சலுக்கு பலியானோரின் எண்ணிக்கை 83 ஆக உயர்ந்துள்ளது.

# இலங்கையில் தொடரும் இன அழிப்பை இந்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்

## கம்யூ. டி.ராஜா வலியுறுத்து



மதுரை, ஒக. 28

இலங்கையில் தொடரும் இன அழிப்பைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா வலியுறுத்தினார்.

மதுரையில் அகில இந்திய மாணவர் பெருமன்றத்தின் 13 ஆவது மாநில மாநாட்டையொட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கையில் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 3 லட்சம் தமிழர்கள் கடும் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகின்றனர். அங்கு இன அழிப்பை இலங்கை அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது.

இலங்கையில் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்கள் உணவு, மருந்து, சுகாதார வசதிகளின்றித் தவிக்கின்றனர்.

இலங்கைத் தமிழர் நல்வாழ்வுக்காக இந்திய அரசு ரூபா 500 கோடி நிதியுதவி அளித்துள்ளது. ஆனால் அவை அவர்களுக்குச் சென்று சேர்ந்ததா என்பது தெரியவில்லை.

இலங்கைத் தமிழர்கள் இன்னும் 180 நாள்களில் தங்கள் இருப்பிடங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று மஹிந்த ராஜபக்ஷ உறுதி அளித்துள்ளார் எனப் பிரதமர் மன்மோகன் சிங் கூறுகிறார். ஆனால், அவர் சொல்லும் 180 நாள்கள் எப்போது தொடங்குகிறது, எப்போது முடிகிறது என்று திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லை - என்றார்.

# பாட்டியைப் பார்க்க இலங்கை விஜயம் 5 படங்களை மறுத்தார் என்கிறார் பூஜா



சென்னை, ஒக. 28

'நான் கடவுள்' படத்துக்குப் பின்னர் இலங்கை சென்றுவிட்டமையால் 5 படங்களில் நடிக்கவில்லை - என்றார் நடிகை பூஜா.


இதுபற்றி அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

'நான் கடவு'ளுக்கு பின்னர் புதிய படங்களை ஒப்புக்கொள்ளாதமை ஏன் என்கிறார்கள். தமிழில் கோவா உட்பட 2 படங்கள் மற்றும் தெலுங்கில் 3 படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தது. இலங்கையில் எனது பெற்றோர் இருக்கின்றனர். அங்குள்ள எனது பாட்டிக்கு 90 வயதாகிவிட்டது.

அவர் உடல்நலம் இல்லாமல் இருக்கிறார். அம்மா மட்டுமே அவருக்கு பணிவிடை செய்து வந்தார். 'நான் கடவுள்' முடிந்தவுடன் நானும் உதவிக்கு வருகிறேன் என்று கூறியிருந்தேன். அதனால் படப்பிடிப்பு முடிந்ததும் அங்கு சென்றுவிட்டேன்.

இந்நிலையில் என்னால் புதிய படங்களின் கதையும் கேட்க முடியவில்லை, ஒப்புக்கொள்ளவும் முடியவில்லை. சமீபத்தில்தான் பெங்களூர் வந்தேன். வரும் டிசம்பர் மாதத்துக்குப் பின்னர் புதிய படங்களை ஒப்புக்கொள்வேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறவன்புலோப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஏர்பூட்டு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் விவசாய நிலங்களை பார்வையிடுவதையும் டிரக்டர் கொண்டு நிலத்தை உழுவதையும் படங்களில் காணலாம். பிரிட்டிஷ் தூதுவர் பீற்றர் ஹெய்ஸ், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் உரையாற்றுவதையும் நல்லை அதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள், யாழ். ஆயரில்லக் குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அருணன்)

# மறவன்புலோவில் கையளித்த வயலை ஏர் மூலம் உழுது விவசாயத்தை ஆரம்பித்து வைத்தார் பஸில்

யாழ்ப்பாணம், ஓக.28

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில்- தனங்கிளப்பு மறவன்புலோப் பகுதியில் செய்கை பண்ணப்படாது சுமார் 10 வருடங்களாக இருந்த விளை நிலங்கள் நேற்று வியாழன் விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டன. அங்கு ஏர் உழுது விவசாயத்தை ஆரம்பித்து வைத்தார் பஸில் ராஜபக்ஷ அவருடன் இணைந்து இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவரும் ஏர் கொண்டு வயலை உழுதார்.

இந்த நிகழ்வு தென்மராட்சியின் தெற்கு பகுதிகளான மறவன்புலோ வயல் பகுதியில் வீதியோரமாக அமைக்கப்பட்ட விசேட பந்தலில் யாழ். அரசாங்க அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

நண்பகல் விசேட ஹெலி மூலம் தனங்கிளப்பு சந்தி பகுதியில் வந்து இறங்கிய ஜனாதிபதியின் ஆலோசகரும் யாழ்.மாவட்ட செயலணிக் குழுத் தலைவருமான பஸில் ராஜபக்ஷ இராணுவ அணிவகுப்புடன் அழைத்துவரப்பட்டார். ஜனாதிபதியின் ஆலோசகரான பஸில் ராஜபக்ஷவுடன் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் மார்க், சமூக நலத்துறை அமைச் சர் கே.என்.டக்ளஸ் தேவனந்தா, பிரிட்டிஷ் தூதுவர் பீறறர் ஹெய்ஸ், கமநல அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் ரவீந்திரவிதாண ஆகியோர் வரவேற்கப்பட்டனர்.

முதல் நிகழ்வாக மங்கள விளக்கினை ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ உட்பட நல்லை ஆதீன குரு முதல்வர் , ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அருட் தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவனந்தா, கமநல அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் ரவீந்திர விதாண யாழ்.மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.பி.ஆர் மார்க் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர். நிகழ்வில் வரவேற்புரையை நாவற்குழி கமக்கார அமைப்பின் தலைவர் தி.தங்கவடிவேல் நிகழ்த்தினார். ஜனாதிபதியின் ஆலோசகரும் யாழ்.மாவட்ட செயலணித் தலைவருமான பஸில் ராஜபக்ஷவின் உரையை யாழ். அரச அதிபர் க. கணேஷ் தமிழில் மொழி பெயர்த்தார்.

தொடர்ந்து நிகழ்வில் கமக்கர அமைப்பினருக்கு விவசாயத்தை மேற்கொள்ள ஊக்குவிப்புப் பணம் யாழ்.மாவட்ட செயலணிக் குழுவின் தலைவர் பஸில் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி. ஏ சந்திரசிறி வடமாகாண இராணுவத் தளபதி ஆகியோரால் காசோலையாக வழங்கப்பட்டது.

நிகழ்வில் வயல் நிலத்தில் காளை மாட்டின் ஏர்க் கலப்பையைப் பிடித்து ஜனாதிபதியின் ஆலோசகரும் யாழ்.மவாட்ட செயலணிக் குழுவின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ தனது வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு - சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வுடன் சேர்ந்து வயலை உழுது - வயல் நிலம் உழுது பண்படுத்தும் நிகழ்வை தொடக்கிவைத்தனர்.

அத்துடன் வயல் நிலத்தில் உழுவதற்கு தயாராக நின்ற உழவு இயந்திரத்தில் ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ ஏறி அமர்ந்து உழவு இயந்திரத்தை இயக்கி விளை நிலத்தை உழவு செய்து ஆரம்பித்து வைத்தார். அவருடன் வடமாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறியும் உழவு இயந்திரத்தில் சில்லின் மட்காட் டில் அமர்ந்திருந்தார்.

இறுதியாக அங்கு குழுமியிருந்த மக்களுக்கு கையசைத்தும், கைகுலுக்கியும் விடைபெற்றுக் கொண்டனர். (1-131-207)

# லியம் பொக்ஸ் யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 28

பிரிட்டன் கன்சவேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நிழல் வெளிவிவகார அமைச்சருமான லியம் பொக்ஸ் நேற்று இலங்கையை வந்தடைந்தார். அவர் இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்து இங்குள்ள நிலைமைகளை ஆராய உள்ளார்.

இன்று பிற்பகல் 2.15 மணிக்கு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளையும் 3 மணிக்கு யாழ். அரச அதிபர் கே.கணேஷையும் அவர் சந்தித்துக் கலந்துரையாட உள்ளார். (அ-1)

# கொட்டும் மழையில் ஆயிரக்கணக்கானோர் முன்பாக மலையக யுவதிகளின் சடலங்கள் தோண்டி எடுப்பு

கொழும்பு, ஓக. 28

கொழும்பில் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த சமயம் மர்மமான முறையில் உயிரிழந்த இரு மலையகத் தமிழ் யுவதிகளின் சடலங்களும் நேற்று மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டன. சடலங்கள் தோண்டப்பட்டபோது அப்பகுதியில் கடும் மழை பெய்தது. கொட்டிய மழைக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு திரண்டிருந்தனர்.

கொழும்பு பிரதம நீதிவானின் உத்தரவுக்கமையவே இந்த சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

மஸ்கெலியா, லக்ஷபான முல்லுகாம் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த சடலங்கள் ஹற்றன் மாவட்ட நீதிவான் ஹப்புக் விதானகே முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டன.

இந்தச் சடலங்கள் கண்டி வைத்திய சாலைக்கு நேற்று கொண்டு செல்லப்பட்டன. அங்கு இருந்து பிரேத பரிசோதனைகளை வைத்திய அதிகாரி ஏ.பி.செனிவிரத்ன மேற்கொள்வார்.

குறித்த யுவதிகள் தொடர்பான வழக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படும் சமயம் இந்த வைத்திய அறிக்கைகள் சமர்பிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

குறித்த இரு யுவதிகளின் சடலங்களையும் மீண்டும் தோண்டியெடுத்து பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கண்டி தேசிய வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டிருந்தது.

கொழும்பு பௌத்தலோக பகுதியில் இரு வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த இ.சுமதி, ஜீவராணி ஆகிய இரு யுவதிகள் கடந்த 15 ஆம் திகதி பௌத்தலோக மாவத்தை பகுதியிலுள்ள கழிவுநீர் கால்வாய் பகுதியில் மர்மமான முறையில் மரணமான நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர் என்பது தெரிந்ததே. (அ-சி)

# மயக்க மருந்தைச் தெளித்து வீட்டை சல்லடை போட்டு 25 பவுண் நகைகள், விலையுயர்ந்த பொருள்கள் திருட்டு

## கொழும்பில் இருந்து வந்தவர்களிடம் கைவரிசை

சண்டிலிப்பாய், ஓக. 28

ஊரடங்கு நேரம் வீட்டு யன்னல் கம்பியை வளைத்து வீட்டிற்குள் இறங்கிய திருடர்கள் அங்கு உறக்கத்தில் இருந்தவர்கள் மீது தூக்கமருந்தைத் தூவி விட்டு வீட்டைச் சல்லடை போட்டுத் தேடி அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி, சங்கிலிகள் உட்பட சுமார் 25 பவுண் தங்க நகைகள், கையடக்கத் தொலைபேசிகள், விலையுயர்ந்த புதிய புடைவைகள், பணம் உட்படப் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார்கள்.

இத் துணிகரமான திருட்டுச் சம்பவம் செவ்வாய்க்கிழமை அதிகாலைவேளையில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

இத்திருட்டுப் பற்றிக் கூறப்படுவதாவது:-

சம்பவதினம் இரவு கொழும்பிலிருந்து தாயும் மகளும் வீட்டிற்கு வந்திருந்தனர். எனவே இரவு உணவை முடித்து விட்டு தாமதமாகவே படுக்கைக்குச் சென்றுள்ளனர். அதிகாலை மூன்று மணிபோல் மகள் தூக்கத்தில் இருந்து எழுந்த போது யாரோ ஒருவர் தனது அறையில் இருந்து வெளியே செல்வதைக் கண்டுள்ளார். உடனே வீட்டிலிருந்தவர்கள் அனைவரையும் எழுப்பி வந்து பார்த்த போது வீட்டின் கதவு கள், யன்னல்கள் எல்லாம் திறந்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்கள்.

உடனே தாம் பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்த பொருள்களைத் தேடிப் பார்த்த போது அனைத்தும் திருடப்பட்டிருந்தமை தெரியவந்தது. வீட்டின் வெளியே வந்து பார்த்த போது வீட்டிற்குள் இருந்த பைகள், எல்லாம் கிளறப்பட்டு கிடப்பதைக் கண்டார்கள். கொழும்பிலிருந்து கொண்டு வந்திருந்த புடைவைகள் உட்பட அனைத்துப் பொருள்களும் திருடப்பட்டிருந்தன.

வீட்டின் வெளியே திருடர்கள் பயன்படுத்திய கத்தி, குறடு, மருந்துப் போத்தல் போன்ற பொருள்களும் எறியப்பட்டு கிடந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. (1-115)

# மின்சாரசபை ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தம்

## யாழ்ப்பாணத்தில் வழமையான சேவை நடைபெறும்

கொழும்பு, ஓக. 28

இவ்வருடத்துக்கான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரி இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் சங்கம் இன்று (28ஆம் திகதி) நடத்தவுள்ள ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் திட்டமிட்டபடி நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாடு முழுவதிலும் பணி புரியும் மின்சாரசபை ஊழியர்கள் நேற்று நள்ளிரவு 12 மணி தொடக்கம் இன்றிரவு 12 மணிவரையும் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் எனத் தொழிற் சங்கத்தின் நடவடிக்கைக் குழு அங்கத்தவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் இயங்கும் மின்சார சபை அலுவலகங்களிலும், டிப்போக்களிலும், சாதாரண கடமைகளிலும் பாதுகாப்புக் கடமைகளிலும் ஈடுபட்டுள்ள சகலரும் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை,

யாழ்ப்பாணத்தில் மின்சாரசபை ஊழியர் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் தொடர்பாக எந்தவித முன்னறிவித்தலையும் விடுக்கவில்லை என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிதத‌ன. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட இந்துக் குருமார் குடும்பங்கள் நேற்றிரவு யாழ்.பஸ்நிலையத்தை வந்தடைந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: நிரோ)

# வன்னி, அகதிகளின் அவலம் குறித்த இரகசிய அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு ஐ.நாவுக்கு கடும் அழுத்தம்

இலங்கையில் வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் எதிர்நோக்கும் மனிதப் பேரவலம் குறித்து தனக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் இரகசிய அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபை பகிரங்கப்படுத்த வேண்டுமென வன்னி முகாம்களில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் மனிதநேய அமைப்புகள் ஐ.நாமீது அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கி உள்ளன..

இது தொடர்பாக இந்த மனிதநேய அமைப்புகள் தங்களுக்குள் ஒன்றுகூடி ஆராய்ந்துள்ளன என்றும் இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நெய்ல்புஹ்னேயை சந்தித்து உரையாடுவதற்குத் தீர்மானித்துள்ளன என்றும் மேலும் அறியவந்துள்ளது.

ஐ.நாவுக்கு கிடைக்கப்பெற்ற குறித்த இரகசிய அறிக்கையை ஐ.நா. மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆகியோர் பகிரங்கப்படுத்தத் தவறியிருக்கின்றமை இந்த அமைப்புகளுக்கு கடும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்று 'இன்னர்சிற்றி பிரஸ்' செய்திச் சேவை தெரிவிக்கின்றது.

ஐ.நாவுக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் இரகசிய அறிக்கையில் அகதிகள் தொடர்ந்தும் முகாம்களில் தங்கவைக்கப்பட்டால் எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழை காலத்தில் இன்னும் மிகப் பெரிய மோசமான நெருக்கடிகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று அறிக்கையிடப்பட்டிருக்கிறது என்று அந்த மனித நேய அமைப்புகள் நம்புகின்றன என்றும் தெரியவருகிறது.

இந்த இரகசிய அறிக்கையைப் பகிரங்கப்படுத்தாமல் இருப்பதன் மூலம் ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்ற முயல்கிறாரா என்ற சந்தேகம் இந்த அமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## திறந்த பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிரந்திய நிலையத்தில் 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான சமூக விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறிக்கு தகைமைகள் எதுவும் தேவையில்லை. 18 வயதினை பூர்த்தி செய்த அனைவரையும் 11.09.2009க்கு முன் விண்ணப்பிக்குமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (6)

## மின்சாரசபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தடையின்றி அனைத்து ஊழியர்களும் நாளை (அதாவது இன்று) சேவைக்குச் சமுகமளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15 ஆம் பக்கமும் பார்க்க)

## இலங்கை அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வரு மாறு:-

இளைஞர்கள் சிலரை எமது இராணுவத்தினர் சுட்டுக் கொல்வது போன்ற வீடியோ காட்சியொன்றை 'சனல் - 4' தொலைக்காட்சி இங்கிலாந்தில் ஒளிபரப்பியது. அந்த வீடியோ காட்சி உண்மையான ஒன்றல்ல.

எமது இராணுவத்தினர் மிகவும் ஒழுக்கமுடையவர்கள். உலகில் உள்ள இராணுவத்தினருக்கே அவர்கள் முன்னுதாரணமாக நடந்துகொள்கின்றனர். அவர்கள் எவரையும் காயப்படுத்தவோ, கொலை செய்யவோ இல்லை.

உண்மையில் யுத்த காலத்தின் போது யுத்தத்தை நிறுத்தவும் பிரபாகரனைக் காப்பாற்றவும் சதித்திட்டங்கள் தீட்டப்பட்டன. அவை வெற்றியளிக்கவில்லை. இப்போது இவ்வாறான வீடியோ காட்சிகளைக் காண்பித்து அரசுக்கு எதிராகச் சதித்திட்டங்கள் செய்யப்படுகின்றன.

தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில் இதுபோன்ற காட்சிகளை உருவாக்குவது பெரிய காரியமல்ல. இது தொடர்பாக எமது வெளிவிவகார அமைச்சு பிரிட்டிஷ் அரசுடன் இணைந்து நடவடிக்கையில் ஈடுபடும் - என்றார்.

## வன்னி மக்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவே இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதி முகாம்களில் உள்ள வன்னி அகதிகளை மீளக்குடியமர்த்தும் விடயத்தில் அரசு மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அதற்காக அவர்களின் பிரதேசங்களில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணி வெடிகள் அகற்றப்படுகின்றன. அந்தப் பணி இலகுவான விடயம் அல்ல.

அம்மக்கள் மீள் குடியமர்த்தப்படும் வரை அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு அவர்களுக்குச் செய்து கொடுத்துக்கொண்டிருக்கின்றது. அதில் எந்தக் குறைபாடும் இல்லை.

ஆனால், எதிர்வரும் தேர்தல்களில் அம்மக்களின் வாக்குகளை சூறையாடும் நோக்கில்தான் அவர்களின் மீள்குடியேற்றத்தை அரசு தாமதப்படுத்துகின்றது என்று மனோகணேசன் எம்.பி. கூறியுள்ளார். இது குறித்த செய்தி நேற்று உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

அப்படியொரு திட்டம் அரசிடம் இருந்ததேயில்லை. மனோகணேசன் வெறும் கற்பனையில் கூறுகின்றார். அகதிகளின் விடயத்தை சில அரசியல்வாதிகள் இவ்வாறு பிழைப்பு நடத்துகின்றனர்.

மறுபுறம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுதந்திர மேடை என்ற அமைப்பின் ஊடாக அரசை விமர்சித்து வருகின்றார். இந்நாட்டில் ஊடக அடக்குமுறை இடம்பெறுவதாக அவர் கூறுகின்றார்.

நாம் ஒரு போதும் அப்படிச் செய்ததில்லை. அப்படி ஊடகங்களை அடக்குவதற்கான தேவையும் எமக்கில்லை. ரணிலுக்குப் பேசுவதற்கு ஏதுமில்லை என்பதால் இப்படியெல்லாம் கூறித்திரிகின்றார் - என்றார். (அ-சி)

# இந்துக் குருமார் குடும்பங்கள் வவுனியாவிலிருந்து நேற்று இரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஒக. 28

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து செட்டிக்குளம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து நேற்று விடுவிக்கப்பட்ட இந்துக் குருமார் குடும்பங்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நேற்றிரவு 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நேற்று மாலை வவுனியாவில் இருந்து புறப்பட்ட இந்துக்குருமார் குடும்பங்கள் யாழ்.பஸ் நிலையத்தை இரவு வந்தடைந்த போது யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், இந்து மாமன்றப் பிரதிநிதியான செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் பொறுப்பேற்றனர்.

பின்னர் அவர்கள் ஆனைப்பந்தியில் உள்ள குருகுலத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்குவைத்து அவர்களின் உறவினர்களிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். (1-7)

## 'சனல் 4'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட வீடியோ குறித்து முதலில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் இம்மாதத் தலைவரான பிரிட்டன் தூதுவர் ஜோன் சவெர்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றன என்பதற்கான ஆதாரமாக இதனைப் பயன்படுத்தலாம் என்பதற்காக வீடியோவின் உண்மைத் தன்மையை ஆராய்வதற்கு ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளர் மத்யூ ரசல் லீயின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சபையின் இம்மாதத் தலைவரான பிரிட்டனின் தூதுவர் சவெர்ஸ் இந்த வீடியோவைப் பார்த்துள்ளாரா? பிரிட்டன் இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? -, என்ற கேள்விகளுக்குப் பதிலளித்த சவெர்ஸ், தான் இன்னமும் அந்த ஒளிநாடாவைப் பார்க்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அந்த வீடியோவின் உண்மைத்தன்மையை சர்வதேச நிபுணர்களின் உதவியுடன் எவ்வாறு உறுதி செய்வது என்பது குறித்து ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகம் ஆராய்ந்து வருகிறது என்று ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த வீடியோவை உறுதிப்படுத்த முடிந்தால் இது இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்களுக்கான ஆதாரமாகப் பயன்படுத்தப்படலாம் என ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

''மோதலின் இறுதிக் காலகட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணைகள் அவசியம் என்பதை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளோம். இதற்குப் பதிலளிக்கும் கடப்பாடு இலங்கை அரசுக்கு ஓரளவாவது இருக்க வேண்டும்'' என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவ வீரர்களால் கைதிகள் சுட்டுக் கொல்லப்படும், மனக்கிலேசமளிக்கும் வீடியோ இருதரப்பினதும் யுத்தக் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் இடம்பெறவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகத்தால் வீடியோவின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய முடியாத போதிலும், சுயாதீன நிபுணர் ஒருவர் இந்த வீடியோ உண்மையானதா என்ற சந்தேகம் எழக்கூடிய வகையில் எதுவும் தென்படவில்லை எனத் தெரிவித்தார் என்று குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

## தெல்லிப்பழை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலை உதயனுக்கு தெரிவித்தார்.

தெல்லிப்புழை, கோப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் பணிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் முதற்கட்டமாக அந்த பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன - என்றார் அரச அதிபர்.

இதேவேளை குடாநாட்டின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பாகத் தகவல் தருகையில் அரச அதிபர் தெரிவித்ததாவது:

இந்த மாதம் மட்டும் குடாநாட்டில் 1,500 குடும்பங்களைச் சேர்ந்த 4601 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் இருந்து கடந்த ஐந்தாம் திகதி 1,067 குடும்பங்களைச் சேர்ந்த 3,220 பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர். நேற்றும் 154 குடும்பங்களைச் சேர்ந்த 465 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலர்கள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன- என்றார் அவர். (அ-1)

விக்னா
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
பல மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய பிரிவு
கணக்கீடு
திரு. பகீரதன்
★ கம்பனி A/L 2010 7 to 8 a.m
★ தொங்கல் க/கு A/L 2011 10-11 a.m
ஆரம்பம் 29.08.2009

PERSONAL CLASS
364, Stanly Rd, Jaffna (Near DMI)
GAQ / BA-I / BA FINAL
யாழ் - பேராதனை
தமிழ் - K.தர்மராஜா
வகுப்புகள் அனைத்தும் நாளை ஆரம்பம் (சனி) 29.08.2009
9 மணி - 4 மணி வரை
ENGLISH - Revision and paper

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS 2011 A/L
(ENGLISH MEDIUM)
CIRCULAR MOTION AND ROTATIONAL MOTION
Start on :- 28.09.2009 (Sat)
Sat, Sun (3.00 - 4.00) P.M.
By:- K.SELVAN



S.J மோட்டோர்ஸ்
மீண்டும் விற்பனையில்
டிஸ்கவறி 135 CC கறுப்பு, நீலம், கறுப்பு, சிவப்பு
பல்சர்- 200 CC கறுப்பு, சிவப்பு, பல்சர்- 180 CC சிவப்பு
XCD- 125 கறுப்பு, XCD- 135 பச்சை, CT- 100 மறூன்
T.P.No.: 7566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்[illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.